திராவிடன்

ஆசிரியர்: என்.வி.நடராசன்

மலர் : 8 15-4-55 வெள்ளி 14 பக்கம் விலை 3 அணு இதழ் : 36

திராவிடன்
மே தின மலர்

முற்போக்கு எழுத்தாளர்கள் தீட்டும் சிறப்புக் கட்டுரைகள் கண்ணைக் கவரும் முகப்பு

அதிக பக்கங்களுடன் வெளிவருகிறது.

விலை 4 அணு

ஏஜெண்டுத் தோழர்கள் கூடுமான பிரதிகளுக்கு உடனே எழுத வேண்டுகிறோம்.

"தரித்திர நாராயணர்கள் சுதேசி கோமான்களாகின்றனர்!"

இந்தியத் துணைக்கண்டத்தை ஆண்டு வந்த வெள்ளையர்கள்' இந்திய மக்களின் வரிப்பணத்திலிருந்து பெருந் தொகையை தங்களின் கோலாகல வாழ்வுக்குச் செலவழித்து வந்த விபரீதப் போக்கினை அன்று காந்தியடிகளும் மற்ற தேசியத் தலைவர்களும் வன்மையாகக் கண்டித்தனர். வைசிராய், கவர்னர்கள் 'அமைச்சர்கள், உயர்தர அதிகாரிகள் ஆகியோருக்கு கொள்ளைச் சம்பளம் ஏன் என்று கடாவினர்! இந்திய நாட்டின் நிலையைக் கவனிக்கும்போது பல்லாயிரக் கணக்கில் சம்பளம் பெற்று செலவு செய்வது அநீதியல்லவா, அதிலும் இந்தியா பொருளாதாரத் துறையில் மிகவும் பின்னடைந்துள்ள நாடாயிற்றே; இந்தியரின் வாழ்க்கை முறையை எடுத்துக் கொண்டாலும் வீண் ஆடம்பரங்களுக்கு அவசியமில்லையே என்று விவரித்துப் பேசினர்—தேசிய ஏடுகளிலேயும் இக்கருத்தைத் தீட்டினர்.

சம்பளப் பிரச்னையில் மட்டுந்தான இந்த உபதேசம்; இல்லையில்லை. கோடைக் காலத்திலே வைசிராய்—கவர்னர்கள், உயர்தர அதிகாரிகள் கோடைக்கானலுக்கும் சிம்லாவுக்கும் செல்வானேன்? லட்சோபலட்ச மக்கள் கோடையிலே வாடி வதங்கி உழைத்துக் கொடுக்கும் வரிப் பணத்திலிருந்து, ஆட்சி பீடத்திலுள்ள கோமான்களின் கோலாகல வாழ்வுக்குச்செலவிடுவதேன்? என்றும் வாதாடினர் தேசியத்தலைவர்கள்!

இதுமட்டுந்தான? — மக்களில் ஜாதிப்பிரிவு என்ற கொடிய நோய் பரவியிருப்பதுபோல சிலருக்குப் பட்டங்கள் வழங்கி இந்தியப் பிரஜைகளுக்குள்ளே பேதாபேதம் காட்டுவதேன்? வெள்ளையர்க்குதான் கவலையில்லையெனினும் அந்தப் பட்டங்களைத் தாங்கித் திரியும் இந்தியர்களுக்காகிலும் இதுகுறித்து மானபிமானம் வேண்டாமா என எள்ளி நகையாடினர்!

இது என்ன அநீதி? ரயில் பிரயாணம் செய்வதிலுமா ஜபர்தஸ்து! கோடானுகோடி மக்கள் மூன்றும் வகுப்பில் நசுங்குண்டு பிரயாணம் செய்கையில் ஒரு சிலர் மட்டும் உல்லாசப் பிரயாணம் செய்ய முதல் வகுப்பாம்! இரண்டாம் வகுப்பாம்! கவர்னர்களுக்கு தனி வண்டியாம்! இந்த பேதா பேதங்களும் ஏகாதிபத்திய படாடோபமும் ஒழிக்கப்படவேண்டும்—சுயராஜ்ய ஆட்சியில் இந்த ஏற்றத் தாழ்வுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்என கர்ஜித்தனர்.

ஆனல் நாம் இன்று காண்பதென்ன? ஆட்சி முலறயிலே தான் ஆயிரத்தெட்டு கோணங்கித்தனங்கள் இருப்பினும் மேற்குறிப்பிட்டுள்ள வாக்குறுதியை யாவது சுயராஜ்ய சர்க்கார் நிறைவேற்றினரா?

● ரயில்வேயைப் பொறுத்தவரை இன்று பழைய கந்தனே கந்தன் என்ற கதைபோல முதல்—இரண்டு—மூன்றும் வகுப்புகள் மட்டுமின்றி முதல் வகுப்புக்கும் மூத்த வகுப்பாக குளுமை தரும் பிரத்யேகவகுப்பும் (Air Condition Saloon) குட்டி போட்டிருக்கிறது!

● கோடை காலத்தைக் கோலாகலமாகக் கழிப்பதற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் கோடைக் கானலுக்கு வர திட்டமிட்டிருக்கிருராம்! அதே நேரத்தில் சென்னை கவர்னர் பிரகாசாவும் அங்கு தங்கியிருக்கப் போவதாகவும் கூறப்படுகிறது. குடியரசுத் தலைவரும், கவர்னரும் மலையுச்சிக்குச் சென்ருல் குட்டி தேவதைகள் மட்டும் சும்மாயிருக்க முடியுமா? எனவே அமைச்சர்கள் சிலரும், அதிகாரிகள் பலரும் கோடை காலத்தைக் கழிக்க கோடைக் கானலுக்குக் குடியேறப் போவதாகவும் தெரிய வருகிறது!

● ஜனதிபதி, கவர்னர்கள் சம்பளச் செலவுகளோ நாம் விவரிக்க வேண்டியதில்லை. சென்ற வாரம் டெல்லிப் பாராளு மன்றக் கூட்டத்திலே பி. சோ. கட்சி உறுப்பினர் ஜனதிபதி—கவர்னர்கள்—ராஜப் பிரமுகர்களின் சம்பளத்தைப்பற்றிக் கண்டித்துப் பேசுகையில் அன்று பிரிட்டிஷ் ஆட்சியின்போது தேசியத் தலைவர்கள் பேசிய பேச்சினையும் கொடுத்த வாக்குறுதியையும் மீறி கொழுத்த சம்பளம் பெறுவது நீதிதான என்று கண்டித்திருக்கிருர். திராவிட முன்னேற்றக் கழகமும் முற்போக்கு எண்ணங் கொண்ட ஏனையோரும் கண்டித்திருப்பதையும் நாம் எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

● பட்டம் பெறும் திட்டமோ—நேரு சர்க்கார் "ஸ்பெஷல் டிராமா" போல நடத்தி வருகின்றனர்! வாலுபோயி கத்தி வந்தது டும்டும் என்பதுபோல சர். பட்டம் சாய்ந்து பாரத ரத்னம் பத்ம விபீஷண, பத்ம பூஷன் ஆகியவைகள் உருவெடுத்துள்ளன!

ஆகவே, வெள்ளையர் ஆட்சியிலிருந்த ஏகாதிபத்ய ஜபர்தஸ்துக்களை சுயராஜ்ய ஆட்சியினர், விட்டபாடில்லை என்பது மட்டுமல்லாமல் அந்த ஏகாதிபத்ய கோலாகலங்களை வெள்ளையர்களைவிட தீவிரமாக வெளுத்துக் கட்டுகின்றனர்!

வெள்ளையர் ஆட்சியில் தரித்திர நாராயணர்கள் என்று தங்களைத் தாங்களே சித்தரித்துப் பீத்திக் கொண்ட சுயராஜ்ய ஆட்சி பீடத்தினர் இன்று சுதேசி கோமான்களாக மாறியுள்ளனர்! ஆனல் ஏழை—நடுத்தர மக்களின் வாழ்வோ வரவர தேய்ந்து வருகிறது. இந்த சுதேசி கோமான்கள் இன்னும் என்னென்ன திருவிளையாடல்களைப் புரிவரோ அறியோம்! — போலோ சுதேசி கோமான்கள்கீ ஜேய்!

—நக்கீரன்

★

பட்டர் பிடிபட்டார்!

"திராவிட இயக்கத்தவர்கள் இருக்கிருர்களே, அவர்கள் நாத்திகர்கள்; கடவுளை நிந்திப்பவர்கள், கோயில்களைக் கூட இடிக்க வேண்டுமென்று சொல்பவர்கள்; நாத்தழும்பேறிய நாசக்காரர்கள்; பிராம்மண துவேஷிகள். அற்பாயுசுக்காரர்கள், ஆண்டவன் தலைமீதே கையைவைக்க முற்படும் பாபிகள்" என்றெல்லாம் வைதீகபுரியினர் தங்கள் வாயார வசை புராணம் பாடி வருகின்றனர்! இந்த விசித்திரப் பிறவிகளின் கூப்பாட்டில் ஏதாவதுஉண்மையிருக்கிறதாயென்று ஆராய்ந்தால் அத்தனையும் அம்பக்' என்ற முடிவுக்குத்தான் அறிவுடையோர் வருவர்.

கடவுளை வழிபடும் துறையில் மலிந்துள்ள கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக வேண்டுமென்று கூறிய மகான்களின்—அறிஞர்களின் கொள்கையைக் கூறிவரும் தி. மு. கழகத்தினர் கடவுள் துரோகிகளாம்! புராணங்கள் பூஜைவழிபாடுகள் ஆகியவைகளின் பேரால் கடவுளை நிந்திக்கும் கயவர்களுக்குப் பெயர் ஆத்திகர்களாம்! இது எப்படியோ தொலையட்டும்.

இன்றுவரை திராவிட இயக்கத்தினர், கோயிலை இடித்தனர்; ஆண்—பெண் சாமிகளின் நகைகளை 'கோட்ஸேயிஸம்' செய்தனர் அல்லது பார்ப்பனர்களுக்குக் கொடுமை விளைவித்தனர் என்று அரசியலார் கூட கூறமுடியாது. இன்னும் சொல்லப்போனல் உண்மையான கடவுள் தன்மைக்கு திராவிட இயக்கத்தினர் கார்டியன்களாக இருந்து வருகின்றனர் என்று கூறினும் மிகையாகாது. இதற்கான விளக்கங்களை, நேரிடையான பல ஆதாரங்களை நாம் எடுத்துக் காட்டும்போது வைதீகர்கள் வழக்கம்போல வரட்டுக்

11-ம் பக்கம்

தோழர் கே. எஸ். ராகவாச்சாரி,
ஆந்திரம்.

டெல்லி பாராளுமன்ற உறுப்பினரே, வணக்கம். தாங்கள் 6-4-55-ம் நாளன்று டெல்லிப் பாராளுமன்றக் கூட்டத்தில் பேசிய விவரத்தை அறிந்தேன். வெள்ளையர் ஆட்சியின்போது வைசிராய்—கவர்னர்கள் ஆகியோரின் ஆடம்பரச் செலவு சம்பளம் ஆகியவைகளைக் கண்டித்துத் தேசியத் தலைவர்கள் பேசிய பேச்சுக்களும், கண்டனங்களும் ஏராளம்.

சுயராஜ்ய ஆட்சியிலே வைசிராய் ஆனாலும், கவர்னர் ஆனாலும் 500 ரூபாய்க்கு மேற்பட்டு சம்பளம் கிடையாது, ஆடம்பர செலவுகளும் இருக்காது என்று கராச்சி காங்கிரஸ் மாநாட்டிலே முடிவு செய்த தேசியத் தலைவர்கள், வெள்ளையர் ஆட்சி காலத்திலே யிருந்த ஆடம்பரங்களையும் சம்பளங்களையுமே பெற்று வருகின்றனர்.

இதுகுறித்து திராவிட முன்னேற்றக் கழகமும் மற்றுமுள்ள மாற்றுக் கட்சிகளும் எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும் நேரு சர்க்காரின் செவிகளிலே ஏறுவதில்லை. பி. சோ. கட்சியைச் சார்ந்த தாங்களும் பாராளுமன்றத்திலேயே இந்த அநீதியை கண்டித்துப் பேசியிருக்கிறீர்கள். இவ்வளவு கூறியும் என்ன பயன்? காங்கிரஸ் ஆட்சியிலே எல்லாம் "மாதிரி"களாகவே காட்சியளிக்கின்றன.

மத்திய சர்க்காருக்கும் மாகாண சர்க்கார்களுக்கும் வருவாயைவிட செலவு அதிகமென்று முகாரி ராகம் வைத்து ஏழை நடுத்தர மக்கள் மீதே மேலும் வரியைச் சுமத்தும் அநீதி ஓரளவாவது தவிர்க்கப்பட வேண்டுமானால் ஜனாதிபதி, கவர்னர்கள், உயர்தர அதிகாரிகள் ஆகியோரின் ஆடம்பரச் செலவுகளையும் சம்பளங்களையும் குறைத்தாலே போதுமானது.

இதனை எத்தனை முறை கூறினாலும் டெல்லி ஆட்சியாளரின் புத்தியில் பதிவதில்லை. ஆனால் வெத்துவேட்டுப் பேச்சுக்களிலே குறைவில்லை. நல்ல மனிதனுக்கு ஒரு சொல், என்பார்கள். டெல்லி ஆட்சியாளருக்கோ பலமுறை சொல்லியாகிவிட்டது! திருந்தக் காணோம். அந்த அளவுக்கு ஏகாதிபத்திய ஜபர்தஸ்தில், ஆடம்பரங்களில் காங்கிரஸ் சர்க்கார் மூழ்கியிருக்கிறது. நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மாந்தரை நினைத்துக் கொண்டால்!

அன்புள்ள
கூத்தரசன்

டாக்டர் ஆர். எம். அழகப்பர் அவர்கள்
காரைக்குடி

ஆரம்பக் கல்வி விசாரணைக்குழு தலைவரே வணக்கம், தாங்கள் 7-4-55-ம் நாள் திருச்சியில் சொற்பொழிவாற்றுகையில் கடவுள் பக்தியைப் பற்றி நல்ல விளக்கம் கொடுத்திருப்பது கண்டு மகிழ்ச்சியுற்றேன். சாப்பாட்டுக்கு வழியில்லாதபோது எப்படி கடவுள் பக்தி ஏற்படும்? என்று கேட்டிருக்கிறீர்கள். தாங்கள் இப்படி ஒரு பத்து கூட்டங்களில் பேசினால் தங்களையும் திராவிட இயக்கத்தவராக ஆக்கிவிடுவார்கள் இந்த நாட்டு கோயில் பூசாரிகள்!

டாக்டர் அவர்களே, வள்ளுவர் கூட கடவுளைப் பற்றிக் குறிப்பிடுகையில் "ஆண்டவனே நீ என்னைப் படைத்தாய், உழைக்க வலிமை தந்தாய். ஓயாமல் உழைக்கிறேன். ஆனால் உழைப்புக் கேற்ற ஊதியம் இல்லை. பிச்சை யெடுத்து சாப்பிடவேண்டி யிருக்கிறது. ஆனால் உழைக்காத உலுத்தர்களோ ஆடம்பர வாழ்வில் மூழ்கியுள்ளனர். ஆண்டவனே இந்த அநீதியை ஒழிக்காவிடில் இந்த ஏற்றத்தாழ்வுக்கெல்லாம் கொடுமைக்கெல்லாம் காரணமான உன்னையே ஒழித்து விடுகிறேன் பார். கடவுளாவது பக்தியாவது." என்று கேள் என சுட்டிக் காட்டியிருக்கிறார். 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக இவ்வுலகியற்றியான்' என்ற குறள் மூலமாக வள்ளுவர்!

இதனைத் தாங்கள் மிக்க கச்சிதமாகக் கூறியிருக்கிறீர்கள். இதுபோன்ற பேச்சுக்களை கூட்டங்களிலே பேசுவது மட்டும் போதாது. முன்னாள் முதலமைச்சரும் இந்நாள் புராணப் பிரசங்கியுமான ஆச்சாரியார் அவர்களுக்கும் அவர்தம் கோஷ்டிக்கும் எடுத்துக் கூறி தெளிவுபெறச் செய்யுங்கள்.

அன்புள்ள
கூத்தரசன்

இதுவும் ஒரு பேச்சா?

இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர், சில சமயங்களில் பழமை வெறியின் மண்டையிலடித்துப் பேசுவார். அடுத்த நிமிடம் அந்த பழமை வெறிக்கு தூபம் போடுவார்! நாட்டை சீர்குலையச் செய்துவரும் பழமை வெறியைக் குறித்து நேரு பண்டிதரின் எண்ணம் எவ்வாறாக யிருப்பினும், அவர் ஆட்சிபீடமேறிய நாளிலிருந்து பழமை வெறியைக் குறித்து அவர் பேசும் பேச்சும், போக்கும் நாடக மேடையில் ஒரு நடிகர், இன்று ஒழுக்க சீலராகவும் அதே நடிகர் அடுத்த நாள் அக்கிரமமே உருவெடுத்த வஞ்சகனாகவும் நடிப்பதைப் போலவே யிருக்கிறது. ஒழுக்க சீலராக நடிக்கும்போது, அதற்கேற்ற வசனமும், வஞ்சகனாக நடிக்கும்போது அதற்கான பேச்சுக்களை நடிகர்கள் மேடையிலே வெளுத்துக் கட்டுவதைப் போலவே நேரு பண்டிதர், பழமை வெறியைக் குறித்து தமது பேச்சுக்களை அள்ளிவீசி வருகிறார்,

மக்களை மாக்களாக்கிவரும் மடமையை ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற எண்ணம், நேரு சர்க்காருக்கு உண்மையிலேயே இருந்திருக்குமானால் கடந்த எட்டு ஆண்டுகளில் எவ்வளவோ மாறுதலைச் செய்திருக்க முடியும். ஆனால் இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் சமுதாய சீர்திருத்தப் பணியில் கையாண்டுவரும் போக்கு நான் நோகாமல் அடிக்கிறேன் நீ ஓயாமல் அழு என்பதைப் போல கண்மூடி வழக்கங்களை வளர்த்து வரும் கோஷ்டிகளுக்கு கைலாகு கொடுத்து வருகிறது!

6-4-55-ம் நாள் இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் அவர்கள் சித்தூர்கார் கோட்டைப் பிரவேச விழாவின்போது தெரிவித்த கருத்துக்களை நண்பர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

"இந்திய மக்களுக்கு எதிர் காலத்தில் நல்லகாலம் வரும். நான் ஜோசியன் அல்ல. நான் ஜோஸியர்களையே விரும்புவதில்லை. ஜோசியர்களைத் தேடிச் செல்பவர்கள் யாரா யிருப்பினும், தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதுடன் பிறருக்கும் கெட்ட வழியைக் கற்பிக்கிறார்கள். மக்கள் ஜோசியர்களிடம் போகக் கூடாது. அவர்கள் சொல்வது சரியோ தவறோ அதுபற்றி எனக்குக் கவலையில்லை. நீங்கள் ஜோசியர்களைத் தேடிச் செல்லாமல் உங்களின் பலத்தையும் அறிவையும் நம்பி வாழவேண்டும். நீங்கள் ஆகாயத்தையும், சந்திரனையும் நட்சத்திரங்களையும் அண்ணாந்து பார்த்து நம்பிக் கொண்டிருக்க வேண்டாம். நீங்களும் என்னைப் போன்றவர்களும் சேர்ந்து செய்த தியாகத்தால் தான் நாடு சுதந்திரமடைந்ததேயன்றி சந்திரனும், நட்சத்திரங்களும், ஆகாயமும் நம் நாட்டுக்கு சுதந்திரத்தைத் தேடித்தரவில்லை என்பதை நினைவில் வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். எனவே ஜோசியர்களிடம் நீங்கள்போக வேண்டாம்" என்று பேசியிருக்கிறார். —(சு. மி. 7-4-55)

இவ்வித அரிய கருத்துக்களைக் கூறிய நேரு பண்டிதருக்கு அதற்கேற்ற துணிவும், அல்லது மன வளமும் இருந்திருந்தால் இந்தியத் துணைக்கண்டம் சீன நாட்டை விட சிறப்புற்றிருக்க முடியுமே.

ஆனால் நேரு பண்டிதர்—நாம் மேலே எடுத்துக் காட்டியபடி ஒரு நாளைக்கு உணர்ச்சி வசத்தால் வைதீக வெறித் தன்மையில் மண்டையலடித்துப் பேசுவதும், அடுத்த நாள் அந்த வைதீக ஆணவத்திற்கு குனிந்து கொடுப்பது போன்ற கும்பமேளாக் கூத்துக்களில் முன்வரிசையில் நிற்பதுமா யிருப்பதால்தான் சுதந்திரம் பெற்று எட்டு ஆண்டுகளாகியும், அந்தச் சுதந்திரம்-தந்திரக்காரர்களின் உலுத்த வாழ்வுக்கு மட்டுமே பயன்படுத்தப் பட்டு வருகிறது.

இந்தியத் துணைக்கண்டம் சுதந்திரம் அடைந்ததற்குப் பின் விடுதலைபெற்ற சீனநாடு இன்றுஅகில உலக அரசியல் துறையிலே தலை நிமிர்ந்து நிற்பதும், இன்னும் சொல்லப்போனால்சீனமக்களிடையே மலிந்திருந்த வறுமை, வேலையில்லாநெருக்கடி, பஞ்சப்பட்டினி ஆகியவைகள் அழிந்தொழிந்தன வென்றால் அதற்குக் காரணம், அந்நாட்டிலே வேறூன்றி யிருந்த கண்மூடி வழக்கங்களுக்கும் மத வெறி கொடுமைகளுக்கும் ஆட்சி பீடத்தினரே முன் வந்து முற்றுப்புள்ளி வைத்து அதுவரை பெயரளவுக்கு மக்களாக வாழ்ந்து வந்த சீன நாட்டினரை உண்மையிலேயே மக்களாக வாழச் செய்துள்ளனர்.

சீனத்துக்குச் சென்று திரும்பி வந்த இந்தியப் பிரதமர் நேரு பண்டிதரோ சமுதாயச் சீர்திருத்தத்திலும் "மாதிரி சோஷலிஸம்" மாடலிலே நடந்து வருகிறார். எனவே இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள மக்கள் அனைவருக்கும் ஓரளவாவது நல்வாழ்வு கிடைக்க வேண்டுமானால் நேரு பண்டிதர் அவர்கள் தமது சொல்லுக் கேற்ப செயலிலும் இறங்கியாக வேண்டும். அதுமட்டுமல்லாமல் மக்களும் நேரு பண்டிதரின் பேச்சிலே நேர்மை யிருக்கிறது என்று மனதார வரவேற்பர். இல்லையெனில் இதுவும் ஒரு பேச்சா? என்று எள்ளி நகையாடுவர். ஆகவே மக்களின் தன்னம்பிக்கையை பாழாக்கும் நடவடிக்கைகள் ஜோஸியத்தின் பேராலோ தேசியத்தின் பேராலோ அல்லது ஆண்டவன் பேராலே செய்யப்படுவதாயினும் அந்த கண்மூடி வழக்கங்களை மண்மூடச் செய்ய நேரு பண்டிதரும் அவரின் சர்க்காரும் முன்வர வேண்டும்.

—**நக்கீரன்**

ஆமதாபாத் தி. மு க.

1-4-55ல் மாலை 5 மணிக்கு அ. குப்புசாமி தலைமையில் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது பொதுச் செயலாளர் அறிக்கைப் படிதேர்தல்நடந்தது. கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். செயலாளர் ச. சந்திரன், துணைச்செயலாளர் எஸ். ராமலிங்கம், பொருளாளர் கு. முத்துக்குமாரசாமி.

செயற்குழு உறுப்பினர்கள்: ர. ரத்தினம், அ. குப்புசாமி, மு. சாமித்துரை, சு. கந்தசாமி, சா. ஆறுமுகம், ந. சம்பந்தம், அ. சிதம்பரம், வி. கே. வேலன்.

கதம்பம்!

குரங்கு-டிடிகே-அல்வா!

தில்லி 'இராஜ்ய சபையில்' "குரங்குகள்" விவாதம்!...உடனே இராவண தர்பார் அனுமானேயோ? அனுமார் பட்டம் பெற்ற சென்னை இராஜாஜி சீடர்களையோ! சென்னை மிருகக் காட்சிசாலையில் குரங்கொன்றை தோளில் சுமக்க படம் பிடிக்கப்பட்ட மந்திரியையோ? அல்லது அனுமான் என்ற பெயரில் சென்னை அரசாங்கத்திற்கு, சிரிப்பாய் சிரித்த வாகனம்—வானவூர்தியையோ நினைத்துக் கொள்ள வேண்டாம்!

அரசாங்க அனுமதியின்றி எவரும் எந்தக் குரங்கையும் இந்தியாவைவிட்டு ஏற்றுமதி செய்யக் கூடாது! இப்படி ஒரு மத்திய அரசாங்க உத்தரவு கடந்த ஆண்டு மார்ச்சு 11-ல் இருந்து அமுலில் இருக்கிறது இது டி. டி. கிருஷ்ணமாச்சாரியை மந்திரியாகக் கொண்ட இலாக்காவைச் சேர்ந்தது.

இத்தகைய உத்தரவு எதனால் கிளம்பிற்றென்றால், பிரதமர் நேரு இலண்டன் சென்றபோது; இந்திய மண்ணை விட்டு ஏற்றுமதி செய்யப்பட்டக் குரங்குகளை எப்படி எப்படிவதைக்கிறார்கள். கொடுமை படுத்துகிறார்கள். சோதனைக்கு ஆளாக்குகிறார்கள் என்பதை எடுத்து விளக்கி; போயும் போயும் இந்த "புண்ய கைங்கர்யத்துக்கா" நம் இந்தியா ஆளாக வேண்டுமென்று வருந்தினார்களாம் இலண்டனில் வதியும் இந்தியர்கள். அதை யொட்டியே டி. டி. கே. மேலேயுள்ள உத்தரவைப் பிறப்பித்து நம் நாட்டு குரங்குகளுக்கு "ஹிம்சை" யில்லாமல் இருக்கப் பார்த்தார்கள்.

தோழியர் அல்வா (பாராளுமன்றப் பெண் உறுப்பினர் — முழுப்பெயர் — தோழியர் வயோலட் அல்வா) விற்கு ஒரு—நியாயமானதுதான்—சந்தேகம்! தரை மார்க்கமாகவோ, கடல் மார்க்கமாகவோ தானே குரங்குகளை ஏற்றுமதி செய்யக் கூடாதென உத்திரவில் கண்டிருக்கிறீர்கள். அப்போது 'காற்று' மார்க்கமாக, அதாவது வானவூர்தி மூலமாக ஏற்றிச்செல்ல தடை கிடையாதே! என்று கேட்டார்.

'காற்று மார்க்கமாக' என்ற பகுதி உத்தரவில் இணைக்காத குறையினால் வாதத்திற்கு காற்று மார்க்கமாகக் குரங்குகளைக் கடத்தத் தடை இல்லை என நினைக்க இடமிருக்கிற தென்பது உண்மைதான். ஆனால் அப்படியும் இது வரை எந்த குரங்குகளும் நம் இந்தியக் கோட்டெல்லையை உத்தரவன்றி தாண்டினதில்லை. என்று டி. டி. கே. பதிலளித்தார்.

மருத்துவ ஆராய்ச்சிக்காக வெளிநாடுகளில் நம்நாட்டுக் குரங்குகளுக்கு 'கிராக்கி'!

கடிகாரத்தைத் திருப்பவா?

நாகரீகமா?......வீசை என்ன விலை என்ற காலத்திலேயே கல்லோடு கல்லுரைத்தால் நெருப்பு உண்டாகும் என்பதையாவது கண்டு கொண்டார்கள். அதுதான் 'சக்குமுக்கிக் கல்'.

அதுகூடத் தெரியாதாமே!...என்ன ஆச்சரியம்!......நெருப்பு உண்டாக்கும் சூட்சமமே இன்றும் அறிந்து கொள்ளாத "ஓங்கே" (ONGE) என்ற இன மக்கள், சிறு அந்தமான தீவில் (Little Andaman Island) வாழ்கிறார்களாமே! மார்ச்சு 28-ந தேதியிட்ட கல்கத்தா செய்தி யொன்று இவ்வாறு கூறுவது மெய்யா! பொய்யா! அதை நேரில் காண டாக்டர் என். தத்தா மஜூம்தார்—அரசாங்க ஆராய்ச்சி அலுவலக நிபுணர்—அந்தமான், நிக்கோபார் தீவுகளுக்கு விரைவில் விரைகிறாராம். இச்செய்தி உண்மையாயின்?...... 'அடக்கர்ம காண்டமே' என்றுதானே நினைக்க வேண்டி வருகிறது!

பனியாவை "சேட்" என்ற காலமும் போகுதே?

அன்று ஜனவரி 55-ல் ஆவடியில் கூடினார்கள், மாடமாளிகைகூடகோபுர உல்லாசவாசிகள்!...கலந்தார்கள்!......"கும்பமேளா" முடிந்தது!...அனுபவித்தவர்கள் ஒரு சிலர்! அவதிப்பட்டனர் பலர்! ஆவேசப்பட்டனர் பலப் பலர்!! திருவல்லிக்கேணி. ஆர். நாகராஜசர்மாவே ஆவேசப்பட்டார் என்றால் வேறென்ன அத்தாட்சி வேண்டும்,

பத்து இலட்ச ரூபாய் பாழாவதா எனப் பதறினர்! முப்பதினாயிரம் ஜூட் லியா! என வெகுண்டார்! இஃதென்னய்யா கூத்து! சின்ன தலைகளும் பெருந் தலைகளுமாக சேர்ந்து கூத்தடிக்குதுகளே! 'பிக்னிக்கா!' உல்லாச பொழுதுபோக்கா? இவ்வளவுக்கும் என்ன செய்யப் போகிறார்கள்! தபால் தலையின் விலையை விக்டோரியா மகாராணி காலத்திலிருந்ததைப்போல காலணாவாகக் குறைக்கத்தான் போகிறார்களா! அல்லது ஏழைகளின் பொத்தல் குடிசைகளை எடுத்துவிட்டு—தட்டை ஒட்டு வீடுகளாகத்தான் மாற்றிவிடப் போகிறார்களா!.........என்னிடமுள்ள கடைசிகாசுவரை பந்தயங்கட்டி கூறுகிறேன், தற்காலிக அழகு மண்டபத்திற்குள்ளே வாய்ப்பந்தல் விரித்து நீங்கள் நன்றாக வெளுத்துப் பேசிவிட்டீர்கள்! நான் பேசியது எப்படி! ஆகா! பலே ஜோர்! என்று பேசிக் கொள்வதைத் தவிர வேறொன்றையும் அசைக்க இவ்வரசியல் "தேவதை"களால் இயலாது இயலாது! எனத் திட்டு திட்டென்று திட்டி தீட்டிவிட்டார் கடிதம் 'இந்து' 16-1-55

எப்படியோ தொலையட்டும்! 'நம்பிக்கைத் துரோகம்!' என்ற மொழி பெயர்ப்புக் கட்டுரை 'திராவிடன்' 1—10—54-ல் வெளிவந்தது அன்பர்களுக்கு நினைவிருக்கலாம். அதில் காங்கிரஸ் தலைமைப் பீடத்தின் பிடியையும் இந்தியாவின் முதன் மந்திரி பீடத்தின் பிடியையும் நேருவே கைக்கொண்டிருப்பது சர்வாதிகாரம்! எனக் கண்டிருந்ததும் நினைவிருக்கலாம். அதற்குப் பிறகு மேலே குறிப்பிட்ட "ஆவடி மேளா" வின் விளைவாகக் காங்கிரஸ் தலைமைப் பிடியை தேபர் வசம் தளர்த்திவிட்டு முதன் மந்திரி பிடியை மட்டும் நேரு கைக்கொண்டது ஒரு வகையில் மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சி அல்லவா!

அடுத்து கூறக்கூடியது, ஆவடியில் நிறைவேறிய "சோஷலிச அமைப்பைப் போன்ற ஒரு சமுதாய அமைப்பை"த் தோற்றுவிக்கக் காங்கிரஸ் முயல்வது என்பதவுமாகும்.

சோஷலிச அமைப்பைப் போன்ற சமுதாய அமைப்பு என்ற பாடத்தின் "சுவடி துவக்கு" முகத்தான், மகா கோசல பிரதேச காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் "சேட் கோவிந்தாஸ்—அப்படி அழைக்கவேண்டியதில்லையாம்—தோழர் கோவிந்தாஸ் என்று அழைத்தால் போதுமென்று அறிக்கை விட்டிருக்கிறார். உயர்வைக் குறிக்கும் "சேட்" என்ற அடைமொழியை வெட்டி விட்டார். "வெல்டன் மிஸ்டர் கோவிந்தாஸ் ஐ கங்ராஜுலேட் யூ!" என்று 'பண்டிட்' என்ற அடைமொழியை வெட்டி வீசிய நேரு இந்நேரம் கோவிந்தாஸுக்கு பாராளுமன்றத்தில் [illegible]யோ, 'போனின்' மூலமோ, [illegible] மூலமோ, அல்லது கடித மூலமோ மகிழ்ச்சி தெரிவித்திருந்தாலும் இருக்கலாம்! தேபரும் அப்படியே மகிழ்ச்சி யடைந்திருக்கலாம்!

வளைந்த வாலை நிமிர்த்த முடியாவிட்டாலும், வெட்டி விட்டால் வீராயமாறி விடுகிறது! என்னமோ 'பனியா'வை 'சேட்டு' என்ற காலமும் போகுதேன்னு வருந்தாமலிருக்க முடியவில்லை.

—டபின்யூ பி. டி. எழி[illegible]

துணுக்கு

"புராணம் அண்டர் ரிப்பேர்?"

ஆசிரியரின் திணறல்!

(இடம்: வகுப்பு அறை)

மாணவர்: ஐயா, ஒரு சிறு ஐயம்?

ஆசிரியர்; ஏனப்பா பொழுது விடிந்து பொழுதுபோனால் உங்களுக்கு சதா ஐயம், ஐயம்!

மா: இல்லை சார்— கோபித்துக் கொள்ளக் கூடாது.

ஆ; சரி சொல்லித் தொலை.

மா: கர்ணன் யாருடையமகன்? தருமன் யாருடைய மகன்?

ஆ: பெரிய சந்தேகம் கேட்டு விட்டாயாக்கும்! கர்ணன் குந்தி தேவி கன்னிப் பருவம் அடைவதற்கு முன் சூரியனுக்குப் பிறந்தவன். தருமன் பாண்டுவை மணந்த பின் எமதருமனுக்குப் பிறந்தவன்,

மா: எமதருமன் யாருடைய மகன் சார்?

ஆ; (திகைப்புடன்) சம்மியைக்கும் சூரியனுக்கும் பிறந்தவன்.

மா: வெம்மை தாங்காது ஓடிய சம்மியை உத்திரகுரு நாட்டில் பெண் குதிரை வடிவமாயிருக்க சூரியன் ஆண் குதிரை வடிவம் கொண்டு கூட பிறந்தவர்கள் தானே அசுவனித் தேவர்கள்.

ஆ: ஆ...மா...ம்!

மா: அப்படியானால் தந்தை யான சூரியனும், அவனுடைய புதல்வர்களான இயமன், அசுவனித் தேவர்களுக்கும் முறையே குந்திக்கும் பிறந்தவர்கள்தானே கர்ணன், தருமன், நகுல சகாதேவர் முதலானவர்கள்.

ஆ: (பதில் கூற முடியாது தவித்து) தலையசைத்தல்.

மா: தந்தையும் புதல்வர்களும் ஒரு பெண்ணைச் சேரலாமா?

ஆ: (வெறுப்புடன்) அசுவனி தேவர்களின் விஷயம் என்று கூறிக்கொண்டே போகிறார் (மாணவர்கள் சிரித்தல்).

—வே. சண்முகம், தஞ்சை

தலைமைக் கழகம் : அறிக்கை—8/55

திராவிட முன்னேற்றக் கழக மாவட்டக் கிளைத் தேர்தல்

மாவட்டம்	தேர்தல் நாள்	நேரம்	இடம்	தேர்தல் ஆணையாளர்
சென்னை	17—4—55	காலை 9 மணி	'அறிவகம்' இராயபுரம், சென்னை—13	ஏ. வி. பி. ஆசைத்தம்பி
தென் ஆற்காடு	17—4—55	மாலை 3 மணி	அமராவதி பங்களா, (தபால் நிலையத்துக்கு அருகில்) நெல்லிக்குப்பம்	எம். எஸ். இராமசாமி
சேலம்	17—4—55	காலை 10 மணி	'சாந்தி நிகேதன்' கோயமுத்தூர் லாட்ஜ், சேலம்	காஞ்சி கல்யாணசுந்தரம்
கோவை	17—4—55	காலை 10 மணி	தி. மு கழக அலுவலகம், கடை வீதி, ஈரோடு	மதுரை எஸ். முத்து
திருச்சி	17—4—55	காலை 10 மணி	'கருணாநிதி புரம்' என். என். பங்களா, திருச்சிராப்பள்ளி	என். எஸ். இளங்கோ
நாஞ்சில்	17—4—55	காலை 10 மணி	தி. மு. கழக அலுவலகம், வடசேரி, நாகர்கோயில்	சி. பி. சிற்றரசு

சி. என். அண்ணாதுரை, பொதுச்செயலாளர், தி. மு. க.

தி. மு. கழகப் பொதுக்குழு

●

தி. மு. கழகப் பொதுக்குழு, சென்னையில் ஏப்ரல் 24-ல் நடைபெறும்.

பொதுச் செயலாளர் தேர்தலும், மாநில மாநாட்டு வரவேற்புக் குழு அமைத்தலும் அன்று முக்கிய நிகழ்ச்சிகள்.

—தி. மு. கழக தலைமை நிலையம்

திராவிடன்

சென்னை : 15—4—55 : வெள்ளி

காமராசரின் வியாக்கியானம்!

●

சென்னை மாநில சர்க்கார் — இம்மாநில மக்களுக்குகந்த—குறிப்பாக ஏழை நடுத்தர மக்களின் வாழ்வுக்கான திட்டங்களைத் தீட்டவோ அல்லது நடைமுறையில் ஆவன செய்யவோ அதிகாரமின்றி 'தர்பார்' நடத்தி வருகின்றனர். இந்நிலையில் இவர்களுக்குள்ள" அதிகாரங்களை"க் கொண்டு செய்யப்படும் காரியங்களோ முதலாளித்துவத்திற்கு பாதுகாப்பு கொடுத்து அதற்கான சமாதானங்களைக் கூறி மழுப்பும் வித்தைகளாகவே காட்சி யளிக்கின்றன.

இன்று தர்பார் சுந்தரர்களாகப் பவனி வருபவர்களை ஆட்சிபீடத்திலே அமரச் செய்ததற்கு முக்கிய பங்கு, தொழிலாளத் தோழர்கள் ஆற்றிய மகத்தான தொண்டு என்பதை தேசியப் போராட்ட வரலாறே எடுத்துக் காட்டும். அவ்வித பெருமைக்கும் உரியவர்களான உழைப்பாளர்களின் வாழ்வுப் பிரச்னையில் நேரு சர்க்காரிலிருந்து காமராசர் சர்க்கார்வரை சொல்லில் தீவிரமும் செயலில் முதலாளித்துவத்திற்கு குனிந்து கொடுப்பதுமாகவே யிருந்து வருகின்றனர்.

சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரை எடுத்துக் கொண்டால் காங்கிரஸ் ஆட்சியினர் தொழிலாளர் சமூகத்திற்குச் செய்துள்ள அநீதிகள் பல உண்டு.

1938-ம் ஆண்டில் ஆச்சாரியார் அவர்கள் முதலமைச்சரா யிருந்தபோது சென்னை சூளை மில்லை மூடும்படியான நிலை ஏற்பட்டது. அதன்நிர்வாகிகளை தட்டிக்கேட்கவோ அல்லது சர்க்காராகிலும் அதனை ஏற்று நடத்தவோ முன்வந்தார்களில்லை. அதுபோலவே 1952-ம் ஆண்டு ஆச்சாரியார் முதலமைச்சர் பதவி வகித்ததும் டிராம்வே தொழிற்சாலை மூடப்பட்டது. அச்சமயத்திலும் ஆச்சாரியார் அவர்கள் சென்னையில் டிராம் ஓடுவது சென்னையின் நாகரீகத்தையே கெடுக்கிறது என வம்புப் பேச்சில் இறங்கினாரே யல்லாது—டிராம்வே முதலாளிகளை வற்புறுத்தி மீண்டும் தொழிற்சாலையைத் திறக்குமாறோ அல்லது அரசியலாராவது ஏற்று நடத்துவதற்கோ ஆவன செய்யவில்லை.

ஆனால் அன்று தா. நா. கா. க. தலைவராயிருந்த தோழர் காமராசர் அவர்கள் ஆராம்வே தொழிலாளர்களுக்காக பரிந்து பேசி சர்க்காரே இத்தொழிலை நடத்துவதற்கு முன்வர வேண்டும் என்றும், நான் ஆட்சி பீடத்திலிருப்பின் அவ்வாறே செய்வேன் என்றும் பல கூட்டங்களில் முழக்கம் செய்தார். காமராசர் ஆட்சிபீடம் ஏறி ஓராண்டாகியும் இதுவரை டிராம்வே தொழிலாளர்களுக்கு விமோசனம் ஏற்படவில்லை. எந்த காமராசர் முன்பு டிராம்வே தொழிற்சாலையை ஏற்று நடத்துவேன் என்று கர்ஜித்தாரோ அதே காமராசர் ஆட்சிபீட மேறியதும் டிராம்வே சர்வீஸை சர்க்கார் நடத்துவதென்றால் பொருள் நட்டமேற்படும் என்று மற்ற அமைச்சர்களை விட்டு அகவல் பாடச் செய்தார்!

அதுமட்டுமல்லாமல், பஞ்சாலைத் தொழிலாளர்களின் குறைகளைத் தீர்க்க சர்க்காராலேயே நியமிக்கப்பட்ட முக்கூட்டு கமிட்டியினர் செய்த சிபாரிசுகளை சர்க்காரே நடைமுறைக்குக் கொண்டு வராமல் தொழிலாளர்களின் சாதாரண உரிமையில் கூட கைவைக்க முனைகின்றனர்.

முத்தரப்புக் கமிட்டியின் சிபாரிசுகளை அமுலாக்காத காரணத்தால் பஞ்சாலைத் தொழிலில் ஈடுபட்டுள்ள எல்லா கட்சித் தொழிலாளர்களுமே ஒருமித்த கண்டனக்குரலை எழுப்பியும் அமைதியான முறையில் தங்களின் எதிர்ப்புகளை காட்டியும் வருவது அனைவரும் அறிந்ததேயாகும்.

இப்பிரச்னை குறித்து சர்க்கார் சொல்லி வரும் சமாதானம் மில் முதலாளிகளுக்குப் பாதுகாப்புத்தேடுவதாக யிருக்கிறதேயன்றி தொழிலாளரின் அவலநிலை ஆட்சிபீடத்திலுள்ளவர்களின் கண்களில் புலப்படவில்லை!

9—4—55-ம் நாள் நெல்லையில் முதலமைச்சர் காமரார் ஜவுளி முக்கூட்டுக் குழுவின் சிபாரிசுகளை சர்க்கார் நடைமுறையில் கொண்டு வராதது பற்றி வியாக்கியானம் செய்திருக்கிறார்,

"ஜவுளி முக்கூட்டு கமிட்டி செய்த சிபாரிசுகளை உடனடியாக நிறைவேற்றுவதில் சங்கடங்கள் இருக்கின்றன. ஏனெனில் எல்லாமில்களும் சிபாரிசுகளை அமுல் நடத்தினால் சில மில்கள் மூடப்பட்டு வேலையில்லாத் திண்டாட்டம்தான் அதிகரிக்கும்."

என்று பேசியிருக்கிறார். தொழிலாளர், தங்களின் உழைப்புக் கேற்ற ஊதியம் கேட்டால் தொழிற்சாலைகளே மூடிவிடப்படும் என்று முதலாளிகள் மிரட்டுவதில் அர்த்தமுண்டு! ஆனால் முதலமைச்சர் காமராசரும் அதே பூச்சாண்டியைக் கிளப்பி பஞ்சாலைத் தொழிலாளர்கள், சாதாரண உரிமைகளைப் பெறமுடியாமல் தவிர்க்கச் செய்வது நீதியாகாது.

தொழிலாளர்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய ஊதியத்தைக் கொடுப்பதால் மில் முதலாளிகளுக்கு பாதகம் ஏற்பட்டுவிடுமென்றால், அந்த மில்களை ஏற்று நடத்த சர்க்கார் ஏன் முன்வரக் கூடாது?

இந்த ஆண்டு சென்னை சர்க்காருக்கு வரவு—செலவில் 3 கோடி ரூபாய் துண்டு விழுகிறது. அதற்காக சில வரிகளையும் உயர்த்தி யிருக்கின்றனர். இந்நிலையில் பல ஆண்டுகளாக குழப்பிவரும் பிரச்னையான முக்கூட்டு கமிட்டியின் சிபாரிசுகளைப் பரிட்சித்துப்பார்க்க ஒரு மில்லையாவது சர்க்காரே ஏற்று நிர்வகிக்கக் கூடாதாவென்று கேட்கிறோம். அப்படித்தான் என்ன நட்டம் வருகிறதென்பதைச் சர்க்காரும், தொழிலாளர்களும் நடுநிலையிலிருந்து முடிவு கட்டலாமே!

இதற்குத் துணிவோ அல்லது மனவளமோ பெறாமல் உழைத்து உழைத்து உருக்குலைந்து வரும் தொழிலாளரிடையே வியாக்கியானம் செய்வது அரசியல் அறமன்று என முதலமைச்சர் காமராசருக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்னை மாவட்ட தி. மு. கழக உறுப்பினர்களுக்கு வேண்டுகோள்

17-4-55 ஞாயிறு காலை 9 மணிக்கு இராயபுரம் அறிவகத்தில் சென்னை மாவட்ட தி. மு. கழக செயற்குழு உறுப்பினர் தேர்தலும், பொதுக்குழு உறுப்பினர் தேர்தலும் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் தலைமையில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது குறித்த நேரத்திற்கு வர வேண்டுகிறேன்.

கே. எம். கண்ணபிரான், செயலாளர்

தி. மு. க. மாவட்டக் கிளைக் கழகத் தேர்தல் முடிவுகள்

●

மதுரை மாவட்டம்

செயலாளர் : எஸ். முத்து

துணைச்செயலாளர் : தா. ஆவுடையப்பன்

பொருளாளர் : இ. காத்தான்

பொதுக்குழு உறுப்பினர்களுக்கு 24பேர் போட்டியிட்டதில் கீழ்க்கண்ட 10 தோழர்கள் வெற்றி பெற்றனர்.

தா. ஆவுடையப்பன், எஸ். முத்து, எஸ். எஸ். ராஜேந்திரன், வ. தனுஷ்கோடி, கே. விக்ரமாதித்தன், கே. ஏ. கலையழகன், எம். எஸ். பால்ராசு, ஜி. கந்தசாமி, இருளப்பன், கு. ப. ம. தர்மன் பி.காம். செயலாளர் தேர்தல் தவிர மற்ற தேர்தல்களுக்கு போட்டி நடைபெற்றது.

இராமநாதபுர மாவட்டம்

செய : இ. எல். எம். சௌந்திரபாண்டியன்

து. செய : மு. உ. ராமநாதன்

பொ : விருதுநகர் வி. பி. வடிவேல்

பொதுக்குழு உறுப்பினர்களுக்கு 19பேர் போட்டியிட்டதில் கீழ்க்கண்ட 10 தோழர்கள் வெற்றி பெற்றனர்:

ஏ. வி. பி. ஆசைத்தம்பி, இ. எல். எம். சௌந்திரபாண்டியன், எம். எஸ். இராமசாமி, சிவசண்முக சுந்தரம், குருசாமி, சு. பாலகிருஷ்ணன், நவமார்க்கண்டேயன், முகவை ஆர். எஸ். பாண்டியன், எஸ். எஸ். தென்னரசு, உத்தண்டன். பொதுக்குழு தேர்தலுக்கு மட்டும் போட்டி நடைபெற்றது.

வடஆற்காடு மாவட்டம்

செ : முல்லை சத்தி

து. செ : வேலூர் கருத்தோவியன்

பொ : ஆரணி கன்னையன்

பொதுக்குழு உறுப்பினர்களுக்கு 17 பேர் போட்டியிட்டதில் கீழ்க்கண்ட பத்து தோழர்கள் வெற்றி பெற்றனர்.

சி. பி. சுற்றரசு, ப. உ. சண்முகம், முல்லை சத்தி, போளூர் சுப்ரமண்யம், க. நெடுஞ்சோழன், கருத்தோவியன், முல்லை வடிவேலு, ஆற்காடு வில்வம், வேலூர் எம்.பி. சாரதி, எஸ்.என். ராஜன். பொதுக்குழுத் தேர்தலுக்கு மட்டும் போட்டி நடைபெற்றது.

மற்ற மாவட்டங்கள்

நெல்லை மாவட்ட செயலாளராக தோழர் கே. வி. கே. சாமி அவர்களும், செங்கற்பட்டு மாவட்ட செயலாளராக தோழர் கே. டி. எஸ். மணி அவர்களும், தஞ்சை மாவட்ட செயலாளராக தோழர் என். எஸ். இளங்கோ அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. மற்ற விவரங்கள் அடுத்த வாரம்.

சொற்பயிற்சிக் கூட்டம்

மறைமலை அடிகள் நாடக மன்றத்தின் சார்பில் சென்னை, ராயபுரம் 40 மன்னார் சாமி கோவில் வீதி மன்ற கட்டிடத்தில் 15-4-55 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு தோழர் சி. நா. சயச்சந்திரன் (அழகிரி அறிவகத் தலைவர்) அவர்கள் தலைமையில் "கடமை" எனும் பொருளின் கீழ் சொற்பொழிவு நடைபெறும். அவ்வமயம் தோழர் தே. அ. கபாலி, வ. வில்லாளன், துரைப்பா பேசுவர்.

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிடப் பித்தன்

19

வட இந்தியாவில் தோன்றிய புத்த மதமானது தென்னிந்தியாவிலும் நுழைந்து செல்வாக்குப் பெற்று வளரத் துவங்கியது. அசோக மன்னனின் பிரச்சாரத்தினலும் புத்தமதத் தலைவர்களின் முயற்சியாலும் புத்தமதம் திராவிடத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தது. புத்த மதத்திற்கும் பழமையானது எனக் கூறப்படும் சங்க இலக்கியங்களுக்கும் நெருங்கியுள்ளத் தொடர்பானது நம் சிந்தையைக் கிளறிவிடக் கூடியதாகும்.

புத்தத் துறவிகள் திராவிடம் எங்கும் பரவி யிருந்தனர். சிற்றூராயினும் சரி, பேரூராயினும் சரி எவ்விடத்தும் புத்த மதக் கொள்கைகளை பரவச் செய்து வந்தனர். பாமரராயினும் சரி பண்டிதராயினும் சரி அவர்கட்கெல்லாம் புத்தக் கொள்கைகளை விளக்கிக் கூறிவந்தனர். ஆட்சிசெய்யும் அரசராயினும்சரி வாணிபம் புரியும் வணிகராயினும் சரி வேளாண்மை செய்யும் பெருநிலக்கிழாராயினும் சரி யாவரையும் அடுத்து அவர்தரும் ஆக்கத்துடனும் ஊக்கத்துடனும் தம் புத்த தர்மக் கொள்கைகளை பரவச் செய்து வந்தனர். புத்த சங்கங்களையும் பள்ளிகளையும் விகாரைகளையும் ஆங்காங்கு ஏற்படுத்தி மக்கள் நலத்திற்கான பல காரியங்களைச் செய்து வந்தனர். மதுரை உறையூர், நாகை, காஞ்சி, வஞ்சி போன்ற தலைநகர்களில் புத்தர்கள் தம் மதப் பிரச்சார அலுவல்களை விரிவாகச் செய்து வருவதற்கான எல்லா வசதிகளையும் பெற்றிருந்தனர். தமது மதக் கருத்துக்களை புதிய வழிகளில் மக்களிடம் பரவவிட்டனர். மடங்களில் வாழ்ந்து வந்த துறவிகள் மருத்துவக் கலையில் வல்லுனர்களாக இருந்தனர். பிணியால் வருந்துவோருக்கு இலவசமாக மருந்துகள் கொடுத்து பிணியாளர்களுக்குத் தொண்டு செய்து வந்தனர். உள்நாட்டு மருத்துவக் கலை பௌத்தர்கள் காலத்தில் செல்வாக்குற்றிருந்தது. பௌத்தப் பள்ளிகள் ஏராளமாக நிறுவப்பட்டு புத்தர் புகழ் போற்றப்பட்டு வந்தது. இந்த பௌத்தப் பள்ளிகளில் கல்விக் கூடங்களை அமைத்து சிறுவர்களுக்கு துவக்கக் கல்வியையும் கற்பித்து வந்தார்கள் பௌத்தத் துறவிகள். அவ்வப்போது பொதுமக்களும் வரவேற்கப்பட்டு பௌத்தக் கதைகளும் தர்ம உபதேசங்களும் பிரசாரம் செய்யப்பட்டு வந்தன; ஏழை எளியவர்கட்கும் அங்கவீனம் அடைந்துவிட்டவர்களுக்கும் பிறவிக் குருடர், முடவர், செவிடர் முதலியவர்கட்கும் அறச்சாலைகள் நிறுவி உணவுடையும் உடையும் கொடுத்து ஆகரித்து வந்தனர். இவ்வறச் செயல்கட்கு அக்காலத்திய அரசர்களும் வணிகர்களும் பொருளுதவி செய்துவந்தனர்.

"ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை
[பகர்வோர்
ஆற்றா மாக்க ளரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்
[கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத்
[தோரே

[மணிமே 11, பாத்தி பெற்ற காதை]

என மணிமேகலையில் கூறப்பட்டுள்ளதிலும் பௌத்தர்கள் செய்து வந்த நற்பணிகள் தெரியவருகின்றன.

இவ்வாறு நாட்டு மக்கட்கு நலம் பல புரிந்து கொண்டே புத்தக் கொள்கைகளையும் போதித்து வந்தபடியால் புத்த மதம் தமிழ் நாட்டில் நன்கு பரவி வளர்ந்து வர ஏதுவாயிற்று. இதுவன்றியும், புத்த மதமானது மக்களை மேல் சாதியார் கீழ்சாதியார் என்று பிறப்பினால் உயர்வு தாழ்வு பாராட்டவில்லை. எக்குடியிற் பிறந்தோராயினும் அன்னவர் யாவரும் புத்தமதக் கொள்கைப்படி மனிதசாதி எனும் ஒரே சாதியினர் தான் எனும் பெருமனப்பான்மைக் கொண்டிருந்தது பௌத்தமதம். சாதி பாகுபாடற்றிருந்த தமிழர் இந்த மதத்தை மேற்கொண்டதில் வியப்பொன்றுமில்லை. பௌத்தமதம் தமிழ் நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்ததென்பதற்கு சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய காப்பியங்களும், சங்கத் தொகைப் பாடல்களும் சான்றாக நிற்கின்றன.

சிறந்த தமிழ் நூல்கள் பௌத்தர்களால் இயற்றப்பட்டதற்குக் காரணம், அந்தந்த நாட்டுத் தாய் மொழிகளை பௌத்தர்கள் பேணி வளர்த்து வந்த அரும் காரியம் தான். தாய்மொழியிலன்றி வேறு மொழிகளில் புத்தக் கொள்கைகள் பிரசாரம் செய்யப்படுவது பெரும் குற்றமாகக் கருதப்பட்டு வந்ததால் பௌத்தர்கள் தமிழ் வளர்க்கவும் தமிழ் நூல்கள் இயற்றவும் ஆன ஒரு நல்வாய்ப்பு ஏற்பட்டது. இந் நல்வாய்ப்பு ஒன்றே தமிழ் மக்களின் கல்வித்தரம் வளர்ச்சியடைவதற்கு உறுதுணையாயமைந்தது.

இப்பௌத்தர்கள் தமிழ் மொழியில் கல்வி கற்பித்து வந்த வரலாற்றினையும், திரு. மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள் தமது "பௌத்தமும் தமிழும்" என்னும் நூலின்கண் கூறியுள்ளவற்றினின்றும் இனிது தெரியலாம். திரு. வேங்கடசாமி அவர்களது இந்நூல் தமிழர்கட்கு ஓர் அரும்பெரும் நிதியாகும். அவரது ஆராய்ச்சி உண்மைகள் 'பௌத்தத் தமிழகத்'தின் சரித்திரத்தினை செப்பனிட்டுத் தந்துள்ளன. 'பௌத்தமும் தமிழும்' என்னும் நூலில் அவர் குறிப்பிடுவதாவது;—

"சமணர்களாகிய பௌத்த ஜைனர்கள் தங்கள் மதக்கொள்கைகளை உலகத்திலுள்ள எல்லோரும் அறிய வேண்டும் என்னும் விரிந்த மனப்பான்மை உடையவர்கள் ஆகையால், அந்தந்த நாடுகளில் பேசப்படும் தாய்மொழிகளில் தங்கள் சமய உண்மைகளை எழுதியும் பேசியும் வந்தார்கள். பிராமணர்களோ அத்தகைய விரிந்த மனப்பான்மை உடையவர்களல்லர். அதற்கு மாறாக, தமது மதத்தைத் தாங்கள் மட்டும் அறிய வேண்டும், என்னும் எண்ணமுடையவர்கள். பொது மக்கள் அறியாத சமஸ்கிருத மொழியில் தங்கள் மதக்கொள்கைகளை எழுதி வைத்துக் கொண்டதோடு அந்த நூல்களைப் பிராமணரல்லாதவர்கள் படிக்கவும் கூடாது பிறர் படிப்பதைக் காதால் கேட்கவும் கூடாது. அப்படிச் செய்வாராயின் அவரைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும்என்று சட்டமும் எழுதி வைத்துள்ளார்கள்.

பரந்த உயர்ந்த பெரிய நோக்கமும், மனப்பான்மையும் கொண்டவர்களான சமணர்கள் தங்கள் மதக்கொள்கைகளை எல்லோரும் அறிய வேண்டும் என்னும் நல்லெண்ண முடையவர்களாதலின் அவர்கள் தங்கள் மதநூல்களை அந்த நாட்டுத் தாய் மொழிகளில் மொழிபெயர்த்து வைத்தார்கள், நாட்டு மக்கள் அறியாதபடி வேறொரு மொழியில் மதக் கொள்கைகளை மறைத்துவைப்பது மன்னிக்க முடியாத பெரும் பாவம் என்பது சமணர்களின் கொள்கை" என்று சீனிவேங்கடசாமி அவர்கள் கூறுவதினின்றும் பௌத்த ஜைனர்கள் தமிழ்மொழி வளர்த்தவரலாறு இனிது தெரியவரும்.

மற்றும் பௌத்தர்கள் தமிழ்நாட்டில் கல்விச் சாலைகள் பலவும் ஏற்படுதற்குக் காரணமாகயிருந்தனர் என்பதையும், அவர்கள கல்விச் சாலைகள் நடத்திவந்த வரலாற்றையும் அவர் தெரிவிப்பது ஈண்டு குறிப்பிட வேண்டியதாகும்.

"இவ்வாறு தாய்மொழி வாயிலாகத் தமது மதக் கோட்பாட்டினை உலகத்தில் பரவச் செய்யுங் கருத்துடையவர்களாய்ப் பௌத்த ஜைனர்களான சமணர்கள் எந்தெந்த நாட்டிற்குச் சென்றார்களோ, அந்தந்த நாட்டு மொழிகளைக் கற்று அந்தந்த மொழிகளில் மத நூல்களையும் பிற நூல்களையும் இயற்றி வைத்தார்கள். இந்த முறையில் இவர்கள் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டு தமிழர்களால் மறக்கற்பாலதன்று. அன்றியும் சிறுவர்களின் கல்வியைப் பற்றியும் கருத்தினைச் செலுத்தி அவர்களுக்குத் தாய்மொழியை எழுதப் படிக்கக் கற்பித்து வந்தார்கள். நாம் இப்பொழுது வழங்குகிற 'பள்ளிக்கூடம்' என்னும் சொல்லே இவர்கள் கல்வியைப் பரப்புவதற்காகச் செய்துவந்த முயற்சியை இனிது விளக்குகின்றது. 'பள்ளி' என்னும் பெயர்க்குப் பௌத்த ஜைனத் துறவிகள் வாழும் மடம் என்பது பொருள். பௌத்த ஜைனத் துறவிகள் தாங்கள் வாழும் பள்ளிகளின் கூடங்களில் பாடசாலைகளை வைத்துப் பாடஞ்சொல்லி வந்தமையால் பாடசாலைக்கும் 'பள்ளிக்கூடம்' என்னும் பெயர் உண்டாயிற்று. பௌத்த ஜைன மதங்கள் மறைந்து பல நூற்றாண்டுகள் கழிந்தும் இன்றளவும் பள்ளிக்கூடம் என்னும் சொல் தமிழ் நாட்டில் வழங்கி வருகின்றது."

"வனப்புப் பொருந்திய தமிழ் மங்கை என்னும் பெருமாட்டிக்கு சிலம்பு, மேகலை, வளை, குண்டலம், மணி என்னும் விலைபெறும் நற்கலங்களை அணிவித்து என்றென்றும் அப்பெருமாட்டி அழகுடன் விளங்கச் செய்தவர் சமணராகிய பௌத்த ஜைன மதத்தவரே யாவர். அஃதாவது சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சிந்தாமணி எனும் ஐம்பெரும் காப்பியங்களை இயற்றித் தமிழ் மொழியை அழகுறச் செய்தவர் பௌத்த ஜைனரேயாவர். மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் மூன்றையும் பௌத்தரும், சிலப்பதிகாரம், சிந்தாமணி என்னும் இரண்டையும்ஜைனரும்இயற்றினர். அவர்கள் அப்பெருமாட்டிக்கு அணிவித்த வேறு அணிகலன்களும் பலப்பல உண்டு."

இவ்வாறெல்லாம் திரு. வேங்கடசாமி அவர்கள் கூறுவதினின்றும் பௌத்தர்கள் தமிழ் மக்களின் கல்வித் துறையில் ஈடுபட்டு தொண்டாற்றி வந்த வரலாறு தெரியும்,

பௌத்தர்களின் செல்வாக்குப் பெற்று விளங்கிய நகரங்கள் பலவுண்டு. காவிரிப்பூம்பட்டினம், பூதமங்கலம், போதிமங்கை, பொன்பற்றி, நாகைப்பட்டினம், புத்தகுடி, உறையூர், காஞ்சிபுரம், திருப்பாதிரிப்புலியூர், சங்கமங்கை, கூவம், அரிட்டாபட்டி, பொதிகை தஞ்சை, அழகர்மலை, வஞ்சிமாநகர், மாளூர், துடிதபுரம் முதலிய இடங்களில் பௌத்தர்கள் சிறப்புற்று விளங்கினர். பௌத்தப் பள்ளிகளும் சங்கங்களும் இங்கெல்லாம் நிறுவப்பட்டு கல்விச் சிறப்பு மிக்கிருந்தது. இப்புத்தப் பள்ளிகளில் புத்தபிரான அருளிச்செய்த ஆகமங்களின் மூலம் விளங்கச் சொல்லப்பட்டும் பொருள் விரித்துரைக்கப்பட்டும் மதக்கல்வி புகட்டப்பட்டும் வந்தன என்பது,

"பனைப்பைந் தோங்கிய பாசிலைப்போதி
அணிதிகழ் நீழலறவோன் திரு மொழி
அந்தர சாரிக ளறைந்தனர் சாற்றும்
இந்திர விகார மேழுடன் போகி

[சிலப்—நாடுகாண் 11—14]

என சிலப்பதிகாரத்துள் வருதலினின்றும் தெரிந்து கொள்ளக் கூடியதாகும். திருமொழி என்பது புத்த தர்மம் ஆகும். அறைந்தனர் சாற்றல் என்பதற்கு பாடமோதி விளங்கச் சொல்லுதல் என்பது பொருளாகும். அருகர், சித்தர், ஆசாரியார்கள், உபாத்தியார்கள், சாதுக்கள் எனப்பட்ட பஞ்ச பரமேட்டிகளும் கூடியிருக்கும் மன்றங்களில் புத்த மார்க்கம் ஓதப்பட்டு வந்தன. என்பது.

"ஐவகை நின்ற வருகத் தானத்துச்
சந்தியைந்துள் தம்முடன் கூட
வந்துதலை மயங்கிய வான் பெரு
[மன்றத்து

(சிலப்ப—நாடுகாண் 18—2

என சிலப்பதிகாரத்துள் வருவதால் தெரிய வரும்.

ஒட்டிய சமயத்துறுபொருள்வாதிகள் பாங்கறிந்தேறி வாதமிடும் பட்டி மண்டபங்களும் புத்த சங்கமாரங்களையும் தர்ம வழிகளையும் கூறும் அறவோர் பள்ளிகளும் இருந்து வந்தன.

காவிரிப் பூம்பட்டினம் பௌத்தர்களின் முக்கிய நகரமாக இருந்து வந்தது. அறவன அடிகள் பெரும் புத்தப்பள்ளி அமைத்து அதன் தலைவராய் இருந்து வந்ததை சிலப்பதிகாரம் கூறும். காஞ்சி மாநகர் பௌத்தர்களின் பெரும் கல்விகூடமாகத் திகழ்ந்தது என்பதும். உலகப் புகழ் பெற்ற பல்கலைக் கழகம் ஒன்று அங்கு இருந்து வந்ததென்பதும் சீன யாத்திரிகர்களான சுவாங் யுவாங், பாஹியான் இத்சிங் முதலியோர் கூறுவனவற்றிலிருந்தும தெரிய வரலாம்.

இக்காஞ்சிப் பல்கலைக் கழகத்தில் கல்விபயின்ற அறிவாளர்கள் நலாந்தா பல்கலைக் கழகத்தின் தலைவர்களாக இருந்து தமிழ் நாட்டின் புகழ் பரப்பச் செய்தனர் என்பதும் தெரியவருகிறது. திருப்பாதிரிப்புலியூரில் பௌத்தர்களால் நடத்தப்பட்டுவந்த ஒரு பல்கலைக் கழகம் இருந்து வந்துள்ளது. பௌத்தர்கள் இங்கு பெரும் செல்வாக்குடன் வாழ்ந்து வந்தனர். இது ஜைனர்களின் புகழ்பெற்ற இடமாகவும் விளங்கி வந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். மதுரைமாநகரில் பௌத்தர்கள் பெரும் திரளாக இருந்து வந்தனர். சங்ககால தமிழ்ச் சங்கத்திற்குப் பின்னர் இம்மதுரையில் பௌத்த ஜைனர்கள் புதிய தமிழ்ச் சங்கமொன்றைத் துவக்கி நடத்தி வந்தனர் என ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். மதுரையில் பௌத்தப் பள்ளிகள் இருந்து வந்தன என்று "மதுரைக் காஞ்சி" கூறுகின்றது பொதிகையை பௌத்தர்கள் புண்ணிய இடமாகக் கருதினர். ஏனெனில் அவலோகிதீஸ்வரர் என்ற புத்தர் இங்குதான் அகத்தியருக்குத் தமிழ் கற்பித்தார் என்பது பௌத்தர்களின் கதை. வஞ்சி நகரும் காஞ்சியைப் போன்றே அககாலத்தில் பல சமயத்தார்களும் வாழ்ந்துவரும் இடமாக இருந்து வந்தது. பௌத்தர்கள் செல்வாக்கு ஓங்கி யிருந்தது பௌத்தப் பள்ளிகள் பல நடத்தப்பட்டு வந்த கலைகளிலும் கல்வி கேள்விகளில் துறைபோகிய பௌத்த அறிஞர் வாழ்ந்துவந்தனர்.

"தேவகுலமுந் தெற்றியும் பள்ளியும்
பூமலர்ப் பொழிலும் பொய்கையு
[மிடை

நற்றவ முனிவருங் கற்றடங்கினரும்
நன்னெறி காணிய தொன்னூற
[புலவ

எங்கணும் விளங்கிய வெயிற்புற
[இருக்கை

(மணிமே—வஞ்சி புக்க காதை 7—

8-ம் பக்கம்

சமுதாய சீர்திருத்தம்

அங்கும்-இங்கும்

அடுக்குமா இது? ஆகுமா நமக்கு? ஆண்டாண்டு காலமாக இருந்துவந்த பழக்கத்தை ஒழிக்கவல்லவோ முற்பட்டு விட்டனர்? பழமைக்கே முற்றுப்புள்ளி வைக்க முற்பட்டுவிட்டனர்? எவ்வளவு தைரியம் இவர்களுக்கு? நாட்டை ஆள்வோருக்கு இதுதானு பட்டது? பரம்பரை வழிவந்ததை ஒழிக்கவன்ரே முற்படுகின்றனர்! இன்று நேற்று ஏற்பட்டதா என்ன?

எனவே இதை நாம் எப்படிச் சகித்துக் கொள்வது? மத ஆசாரங்களில் கைவைப்பதை நாம் பொறுத்துக் கொள்வதா? இந்து மதத்தின் போக்கைத் திருத்த முற்படுவதைக் கண்டு நாம் வாளா இருப்பதா? முடியாது. என்று இப்படியல்ல; இத் தொனியிலே கடந்த வருடத்திலே வடநாட்டுப் பெண்மணிகள் சர்க்காரிடம் முறையிட்டுக் கொண்டனர்.

டில்லி சர்க்கார், திருமண சீர்திருத்தச் சட்டமாக இரண்டை நிறைவேற்றி வைத்தது. இந்துமதத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள சமுதாயத்தில் நடமாடுகிற திருமணங்களின் பேரால் நடைபெறும் மிலேச்சத்தனங்களில் இரண்டை திருத்த முற்பட்டபோதுதான் அதற்கெதிராக இந்த முறையிலே கூக்குரல் எழுப்பினர்! அமைச்சரே இது ஆகாது! என்று வேண்டுகோள் விடுத்தனர்! மதத்தைத் திருத்தும் போக்கில் செல்லாதீர். மத உரிமையில் கை வைக்காதீர் என்றெல்லாம் கோஷித்துக் கொண்டு ஊர்வலம் கூட வந்தனராம்—வடக்கே! அதுவும் பெண்மணிகள்!

மத பக்தியிலே மிகுந்த அக்கரை காட்டுபவர்கள் நாரிமணிகள் அல்லவா! அவர்கள் எப்படி ஒப்புக் கொள்வார்கள் அதில் கை வைக்கும்போது! எனவேதான் பிரச்னையைப் பெரிதாகக் கருதிக்கொண்டு அதை நிறைவேற்றக்கூடாது என்பதிலே மிகவும் சிரத்தை எடுத்துக் கொண்டனர் போலும்.

எவ்வித எதிர்ப்புகள் எழுந்தாலும் விடேன். எப்படியும் இந்துச் சீர்திருத்த சட்டத்தை நிறைவேற்றியே தீருவேன் என்று கூட்டங்களில் மாத்திரமல்ல சட்டசபையிலே கர்ஜனை புரிந்தார் அலகாபாத் பண்டிதர் நேரு!

முதலில் இதைக் கேட்டதும் மிக்க மகிழ்ச்சி ஏற்பட்டது நமக்கு! 'சட்டத்தைத் திருத்துவேன்' என்றுசொன்னபோது அதிக அளவில் சமுதாயச் சீர்திருத்தத்தைக் சட்டத்தின் மூலம் உண்டாக்குவார் என்று காம் பூரித்தோம்!

நேரு என்ன சாதாரண மனிதரா? மதம் செய்த—செய்கிற அடாத போக்கையும் அதனுல் ஏற்பட்டுள்ள திருமண முறையினுல் ஏற்படுகின்ற சங்கடங்களையும் உணர்ந்து உரைத்தவர் அல்லவா? தனது முன்னைய வாழ்நாட்களில் எத்தகைய அரிய கருத்துக்களையெல்லாம் அள்ளி வீசி யிருக்கிறுர்! இந்து மதத்தையும், அதன் நடைமுறைகளையும் சீர்திருத்த எத்தகைய அபூர்வமான வழிகளை கூறி யிருக்கிறுர்!

மதத்தைப் பற்றியும் மதத்தால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற கடவுளைப் பற்றியும் கனம் நேரு அவர்கள் எந்த அளவிற்கு மதித்திருக்கிறுர் என்பதை கீழ்க்கண்ட ஒன்றே நன்கு வெளிப்படுத்தும். 'மதத்தின் பேராலும், கடவுளின் பேராலும், ஒருவேளை அதிக ரத்தம், மற்றதைவிடச் சிந்தப்பட்டிருக்கிறது (...and in the name of Religion and of God Perhaps more blood has been shed than any other name)

எவ்வளவு அழகாக அழுத்தமாகக் கூறியிருக்கிறுர் பாருங்கள்! மதம் என்றுலே வெளிப் போக்குக் கொண்டது. அதனுல் ஒரு பயனும் இல்லை என்பதை எந்த அளவுக்கு உணர்ந்திருந்து ஓதி யிருக்கிறுர்!

'மார்க்ஸ்'கூட இதைத்தானே வலியுறுத்தி யிருக்கிறுர். மதம் மக்களுக்கு அபின் (Religion is the opium of the people) என்று! மதத்தைப் பற்றி லெனின் விளக்கும்போது மார்க்ஸ் மதம்பற்றி என்ன கூறியிருக்கிறுரோ அதுதான் போல்ஷிவிக்கினுடையதாகும், என்று கூறுகிறுர்.

பண்டிதர் இதுபோன்றவற்றை யெல்லாம் நன்கு அறிந்தவரன்றே! மேல் நாட்டின் நாகரிகத் தொட்டிலிலே வளர்ந்தவர் அந்நாட்டு பழக்க வழக்கங்களை எல்லாம் அறிந்தவர். இதைவிட ரஷ்யா சென்று திரும்பியவரும்கூட! இப்படிப்பட்டவர் இத்தகைய அவலட்சணங்கள் நிரம்பியுள்ள மௌடீகங்களை எல்லாம் சீர்திருத்தாமலா இருப்பார்! நல்லதைப் பார்த்தவருக்கு கெட்டது தென்படாமலா போகும்? அதை அப்புறப்படுத்தி விடமாட்டாரா? என்று நினைத்தோம்!

அதுவும் அவருக்கு அகில உலகில் இருக்கிற செல்வாக்கு கொஞ்சமானதா? ஆசியாவின் ஜோதி. முடிசூடா மன்னன் சமாதான தூதுவர் என்றெல்லாம் சிறப்புப் பட்டங்களால் புகழப்படுகிறவராச்சே! அப்படிப்பட்டவர் கண்டிப்பாக இந்த இழி செயல்களை ஒழிப்பார் என்று நம்பினேம்.

அதற்கேற்பவே அவருடைய கர்ஜனையும் இருந்தது.

ஆனல் நடந்ததோ வேறுவிதமாகிவிட்டது! அணுகுண்டு வெடிக்கப் போகிறது என்று சொல்லி அணுகுண்டு வேட்டு வெடித்தகதையாகிவிட்டது! கர்ஜனை யெல்லாம் எங்கோ வீண் புலம்பலாகப் போய்விட்டது. தொட்டற்காக ஏதோ சில திருத்தங்களை மாத்திரம் மிகச் சாதாரணமானதைச் செய்துவிட்டு பெருமூச்சு விட்டுவிட்டார்—பெரிய காரியத்தைச் சாதித்ததைப் போல!

அவர் சாதித்திருக்கிற 'பெரிய' காரியத்தைப் பாருங்கள்!

இருதார மண தடை!
வயது நிர்ணயித்தல்!

இந்த இரு பெருங்(!)கைங்கரியத்தைத் தான் அவர்செய்திருக்கிறுர். கர்ஜனைக்கேற்ப கனஜோராக திருமணம் பற்றிய உயர் திட்டங்களைத் தருவார் என்று எதிர் பார்த்தோம்! ஆனல் மிகச் சாதாரணமான சீர்திருத்தத்தைச் செய்து விட்டார்!

இந்த அற்ப சட்டத்தைக் கண்டுதான் வடநாட்டுப் பெண்டிர்கள் கிளர்ச்சி செய்தனராம்! பார்த்தால் எளிய பிரச்னை மலையளவு என்று சொல்லி தினையளவு செய்ய முடிந்திருக்கிறது. முதலமைச்சர் அகிலம் போற்றும் அதிபர் நேரு அவர்களால்! இதற்கும் எதிர்ப்பு காட்டினர் வடவர்!

இன்றைய சமுதாயத்தில் செல்லரித்துப்போன ஏராளமான செங்காங்கடைப் போக்குகள் மலிந்து கிடக்கின்றன. அதிலும் குறிப்பாக திருமண விஷயமாகக் கொள்ளப்படுகிற முறமைகளினுல் நிறைந்து கிடக்கும் கொடுமைகள் ஏராளமாக இருக்கின்றன!

காதலர் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பெற்றதே இன்பம் என்ற வள்ளுவப் பெருந்தகைக் காணும் இன்பத்திற்கு; உண்மைக் காதலுக்கு முதலில் இச்சமூகப் பழக்க வழக்கங்கள் திருமணத்தில் இடங்கொடுப்பதில்லை.

காதல் நிறைவேருததால் மூழக் கயிற்றிலே காதலர்கள் உயிரைப் போக்கிக் கொள்ளும் காட்சிகள் நாட்டிலே காணுகிறேம் என்றுல், முன்பின் அறியாத மாப்பிள்ளைக்கும். ஆண்களையே பார்த்திருத ஆரங்காட்டு அம்மைக்கும் முடிச்சுப் போட்டு அதனுல் இன்பமற்ற வாழ்வு வாழ்வதைக் காணுகிறேம் என்றுல் அதற்கு சமுதாயமோ அல்லது சட்டமோ தகுந்த வழியைக் காட்டவில்லை என்பதைத்தானே காட்டுகிறது.

இளம் வயதிலே மணமுடிக்கும் 'பால்ய விவாகம்' இன்றும் நாடெங்கும் நடந்து கொண்டுதானே வருகிறது!

கணவனை அடைந்தவன் கணவன் இழந்தபின் கைம்பெண்ணுக—வாழ்வு அற்றவளாகத்தானே வாழ வேண்டியிருக்கிறது.

'பெண்' பார்த்து முடிந்ததும் வரதட்சனை என்ற பெயரால் பெண் வீட்டாரைப் பிய்த்தெடுக்கும் பேய்ப்போக்கு ஒழிந்திருக்கிறதா? இதனுல் இரண்டு மூன்று பெண் பிள்ளைகளைப் பெற்றவர்கள் படும்பாடு பெரிதாகவன்றே இருக்கிறது, 'பெண் பிறவியே மோசம், பாவமானது" என்று எண்ணக் கூடிய ஈனபுத்தியை அல்லவா ஊட்டிவிடுகிறது. இப்போக்கு!

ஜாதி வித்தியாசங்கள் உண்மைத் காதலுக்குஉலைவைக்கக்கூடியதாகவன்றே இருக்கிறது! இதனுல் எத்தனை இளம் காதலர்கள் கடும் இடும்பைக் குள்ளாகின்றனர்!

கல்லானுலும் கணவன், புல்லானுலும் புருஷன் என்று மணம்முடித்து மரக்கட்டையாக இருந்தாலும் கட்டியழவேண்டியிருக்கிறதே தவிர—மனம் பிடிக்காமல் இருக்கும் கணவனிட மிருந்து விடுபட உரிமை அளிக்கப்பட்டிருக்கிறதா?

சமுதாயத்தில் ஆணும்—பெண்ணும் சமம் என்னும் உரிமையும் ஆண்களைப் போல் பெண்களுக்கும் உரிமை உண்டு என்பதாவது வலியுறுத்தப்பட்டிருக்கிறதா?

சமுதாயத்தின் எந்தக் கோணத்தை எடுத்துக் கொண்டு பார்ந்தாலும் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் ஏராளமாக இருக்கின்றன. சமுதாயம் ஒரு சாக்கடையாக இருக்கிறது இன்று! அந்தச் சாக்கடையை தூய்மைப் படுத்துவது மிகவும் துரிதமாகச் செய்யப்பட வேண்டும்! இத்தகைய கொடிய புழுக்களை யெல்லாம் அப்புறப்படுத்த முனையாமல் இன்றும் வைத்துக் கொண்டிருப்பது அழகல்ல.

பண்டிதரோ இத்தகைய அமைப்புக்குள் சாதகபாதகங்களை உணர்ந்தவர் மட்டுமல்ல உணர்ந்து எழுதியவர்! உலகம் வியக்கும் மனிதர்! அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவரும் கூட! இப்படிப்பட்டவர் தான் தலைமை வகித்து நடத்தும் நாட்டில் இத்தகைய உருப்படாத ஓட்டைகளைப் பார்த்துக் கொண்டா இருப்பது? வெள்ளைக்காரன் வைத்துவிட்டுப் போனதைத்தான்

திருப்பிப் பாடுகின்றனரே தவிர முன்னேற்றம் எதைக் கண்டார்கள்!

சட்டம் செய்யும் உரிமை காங்கிரசார் கையில்! நினைத்ததைச் செய்யும் அதிகாரம் அவர்கள் கையில்! கையசைத்தால் போதும் காரியத்தை இலகுவில் முடித்து விடலாம்! எதிர்ப்புகளை ஒழித்து இலகுவில் சீர்திருத்தம் செய்திருக்கலாம்! எனினும் செய்திருக்கிறார்களா?

நாம் இன்று பெற்ற சுதந்திரம் பேணி வளர்த்திட வாரீர் என்று பேசுவதும் உலகமெங்கணும் நம்புகழ்பரவுகிறதுஎன்று கூறுவதும் வெறும் பேதமைதானே!

மேல் நாட்டைப் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறுகிறோம் என்று பண்டிதர் பேசிடும் கூட்டங்களிலெல்லாம் பெருமை கொள்கிறார். உள்ளுக்குள் உலுத்த போக்குகளை வைத்துக் கொண்டு உலகுக்கு உயர்ந்தோராகக் காட்டுவது பெருமைக்கு இழுக்காகும்.

சமயம் கிடைக்கும் போதெல்லாம் சாடுகிறார்—சனாதனம் கண்டு, எனினும் எதிர்ப்பை துச்சமென மதித்து சரிசெய்ய முன்வர மறுக்கிறார்! ஆனால் பேச்சுக்கோ குறைவில்லை! அவலட்சணங்களை வைத்துக் கொண்டு 'அழகு' என்று பேசுவது அவருக்கு இருக்கும் அந்தஸ்து செல்வாக்கு ஆகியவற்றிற்கு அழகல்ல!

ஒன்றா இரண்டா எட்டு வருடங்கள் ஆகிவிட்டனவே, சுதந்திரம் பெற்று! அன்றுதான் அனுபவமில்லாதவர்கள் இப்போது செய்வதற்கு என்ன? புரட்சிகர மாறுதலை செய்வதை விட்டு விட்டு மிகச்சாதாரண விஷயமாகிய 'சொத்துரிமை' பற்றியா இப்போது கவலை எடுத்துக் கொள்வது! பற்றிப் பிடிக்கும் தீயை முதலில் அணைத்துவிட்டல்லவா பின் தீப்பிடிக்காத வழிகளைச் செய்ய வேண்டும்.

சுற்றிச் சுற்றி வருகிறார் நேரு! லண்டன் சொந்த ஊர் மாதிரி அவருக்கு! அமெரிக்கா சுற்றி வந்தாகிவிட்டது! ரஷ்யாவை முன்பே ரசித்தாகி விட்டது சீனா இப்போது தான் சென்று திரும்பியிருக்கிறார்! இன்னும் கோடையில் ரஷ்யா செல்ல இருக்கிறார் இவ்வளவு தூரம் நாகரீகம் மிகுந்த நாடுகள் சென்று அங்குள்ள முன்னேற்ற போக்குகளையெல்லாம் கண்டு அதை இங்கும் பேசி வருபவர்கள் தன் நாட்டில்ஏன் இந்த அநாகரீகங்களை அனுமதித்திருக்கிறாரோ தெரியவில்லை!

ஆண்டோ எட்டாகி விட்டது! இன்னும் நிலைமை இதுதானே.

●

மக்கள் சீனா இந்தியாவிற்கு அருகில் உள்ள நாடு. நேருகூட சமீபத்தில் தான் சென்று திரும்பி யிருக்கிறார். அது 1949-ல் சுதந்திரமடைந்தது. அதன் பிரதமராக இருப்பவர் சூ-என்-லாய் அவர் சுதந்திரம் அடைந்த மறு ஆண்டே அதாவது 1950-ல் பெரும் புரட்சிகரமான சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார், சமுதாய விஷயங்களில்.

சீனா மேல் நாடுகளைப்போல் முற்போக்கடைந்ததும் அல்ல! குருட்டு நம்பிக்கைகள் நிறைந்த நாடு, இந்தியாவைப்போல சீரழிந்த சமுதாய அமைப்பைக்கொண்டதாகத் திகழ்ந்தநாடு தான் அது!

இன்னும் இந்த நிலையை நாம் கூறுவதைவிட தலைவர் மா-சே-துங் அவர்கள் கூறியுள்ளபடி கூறினால் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

நாலுவகை கயிறுகளால் கட்டப்பட்டிருந்தனராம் பெண்கள்! ஆண்களோ மூவகைக் கயிறுகளால் கட்டப்பட்டிருந்தனராம்: என்ன அந்தக் கயிர்கள்!

அரசுச் சக்தி (State Power)
தெய்வீக சக்தி (Divine Power)
இனச் சக்தி (Clan Power)

இந்த மூன்றும் ஆண், பெண் ஆகிய இருபாலரையும் பொதுவாகக் கட்டுப்படுத்தியிருக்கிறது. இதைவிட பெண்கள் கணவனாலும் கட்டுப்படுத்தப் (Control of husband) பட்டிருக்கிறார்கள்.

இந்த நாலவகைக் கயிறுகளினால் விவசாயிகள் அழுத்தமாகக் கட்டப்பட்டிருந்தார்கள். (They were four thick ropes binding our peasants tight) என்று கூறுகிறார் மா-சே-துங் அவர்கள்!

'சமுதாயத்தை இன்னும் ஊடுருவிப் பார்த்தால்—அதிலும் கிராமப் புறங்களின் நிலையைக் கவனித்தால் அதிகமாகப் பரவிக் கிடந்த பழங்கால முறைகள் இன்னும்பற்றியிருக்கக் காணலாம்' (...If they go deeper into society and take a look, especially at the situation in the rural areas, they will be convinced of the widespread influence of the old system) என்று இன்னும் இருக்கிற நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறார் மக்கள் சீனாவின் தலைமை நீதிமன்ற உதவித் தலைவரான சாங்-ஜிய்-சாங் என்பவர்!

இவைகளே போதும் சீனாவின் நிலையை விளக்க! தலைவர் மா-சே-துங் அவர்கள் குறிப்பிடுவதைப்போல நான்கு வகைச் சக்திக் கயிர்களால் கட்டப்பட்டிருந்த சீனாவில் தலைமை நீதிமன்ற உதவித் தலைவர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல சட்டம் அமுல் செய்யப்பட்டிருந்தாலும் கூட இன்னும் "பழம் வாடை" வீசக்கூடிய சீனாவில்தான் இச்சீர்திருத்தத்தைச் செய்திருக்கிறார்கள்! செய்திருக்கிற சீர்திருத்தங்களைச் சற்றுப் பார்ப்போம்!

"இருதாரமணம், கலியாணமாவதற்கு முன் ஒருவருடன் சேர்க்கையாக இருத்தல், பாலிய விவாகம், விதவைகள் மீண்டும் மணம்

ச. வெ. பாண்டியன்

முடித்தலில் தலையிடுதல், கலியாணத்தை ஒட்டி பணம் வசூலிப்பதோ வெகுமதி கேட்பதோ (வரதட்சணை) ஆன இதுபோன்றவைகள் தடுக்கப்படும்" என்பதுதான் திருமணச் சட்டத்தின் பொதுவழியின் இரண்டாவது ஷரத்து!

எவ்வளவு பெரிய வேட்டுப் போட்டிருக்கிறார் பார்த்தீர்களா? பாலிய விவாகம் கூடாதாம்! இருதார மணம் இருக்கக் கூடாதாம்! இருதாரமணம் இருக்கவே கூடாதாம்! விதவையின் மறு விவாகம் அனுமதிக்கப்பட வேண்டுமாம்! வரதட்சிணை கேட்போர் வாங்குவோர் தண்டனைக்குள்ளாவார்களாம்! எவ்வளவு பெரிய சீர்திருத்தத்தைச் செய்திருக்கிறார்கள் அங்கு!

நாட்டுச் சட்டத்தைக் காட்டி அழுக்கியோரும், தெய்வீகததைக் காட்டி கூடாது என்றோரும், ஜாதியத்தைக் காட்டி அடுக்குமா இது என்று கேட்டோரும் இருக்கத்தான் செய்தார்கள்! இப்படிப்பட்டவர்கள் பல துறைகளில் படையெடுத்து வரவும் செய்தார்கள்! எனினும் அதையெல்லாம் அப்புறம் தள்ளிவிட்டு எவ்வளவு தைரியமாக சட்டத்தை அமுலாக்கி இருக்கிறார்கள்! சமுதாய சீர்திருத்தத்தில் எத்தகைய புரட்சியை உண்டாக்கி யிருக்கிறார்கள்.

பெண்ணை ஆணுக்கு அடிமையாக இருக்கும்படி அமைக்கப்பட்டிருக்கிற கட்டாய முறை பழங்காலச் சட்டம் ஒழிக்கப்பட்டிருக்கிறது இப்படி பொதுவிதியின் முதல் ஷரத்தில் கூறி யிருக்கின்றனர். இதன்மூலம் பாட்டிக் காலத்து சட்ட முறைமைக்கு ஆப்பு வைத்திருக்கின்றனர்.

மேலும் சட்டத்தைச் செய்த அவர்கள் மனிதனுக்கும் விலங்குக்கும் உள்ள வித்தியாசம் என்ன? என்பதை அறிந்து, அப்படியானால் மனிதன் எப்படி வாழவேண்டும்? இன்பம் பொங்க சமூக அமைப்பு எப்படி இருக்க வேண்டும்? அவனுக்கு எந்த முறையிலெல்லாம் உரிமை வழங்கப்பட வேண்டும்! என்பன போன்றவற்றை எல்லாம் ஒருங்கே ஆராய்ந்து சீர்திருத்தி யிருக்கின்றனர்—சட்டத்தையும்—மனித சுபாவத்தையும்!!

இதற்கு கீழே சுருக்கிக் கூறப்படும் மற்ற ஷரத்துக்களே எடுத்துக் காட்டாகும்.

இருசாராரின் பூரண சம்மதத்தின் பேரிலேதான் திருமணம் உறுதிப்படுத்தப்படும். இதில் மூன்றாமவரின் தலையீடு அனுமதிக்கப்பட மாட்டாது!

பெண் 18 வயதை அடைந்த பின்னும் ஆண் 20 வயதை அடைந்த பின்னும்தான் திருமணம் நடத்த அனுமதிக்கப்படும்.

கணவனும், மனைவியும் சம அந்தஸ்தோடு, சக தோழர்களாக வாழ்க்கை நடாத்த வேண்டும்.

கணவன், மனைவியர் கடமை என்னவென்றால் ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டி, மதித்து, உதவி, ஒருவரை ஒருவர் தழுவி நின்று, ஒற்றுமையோடு உற்பத்திக்கு ஆக்கமளித்து, குழந்தைகளின் மேல் கவனம் செலுத்தி குடும்பத்திற்கு நன்மை சிறக்க கூட்டாக நின்று புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதே!

தொழில் துறை, சமுதாயத் துறை ஆகியவைகளில் இருவருக்கும் அங்கம் வகிக்கவும், சுதந்திரமாக ஒத்துழைக்கவும் உரிமை உண்டு.

இருவரும் விரும்பின் விவாகரத்து அனுமதிக்கப்படும்.

பாகப் பிரிவினை, விவாக ரத்துக்குப் பின் குழந்தை பராமரிப்பு போன்றவைகளுக்கெல்லாம் தகுந்தமுறை திட்டம் தீட்டியிருக்கிறார்கள்!

மக்கள் சீனா விடுதலை பெற்று ஓராண்டிற்குள் செய்திருக்கும் சீர்திருத்தங்கள் இவை! பழையபோக்குகளுக்கு மூடுவிழா கட்டி புதியன புகுத்தி யிருக்கின்றனர் அங்கு!

மனிதன் மனிதனாக சகலவித உரிமைகளுடன் வாழவேண்டும், எல்லோரும் ...னம், எல்லோரும் ஓர்நிரை என்ற தன்மை வேண்டும் என்னும் முறையிலே சீர்திருத்தியிருக்கிறார்கள் கயிறுகளால் கட்டப்பட்டிருந்தவனை வெளியே சுதந்திரமாக உலவ விட்டிருக்கிறார்கள். அதிலும் பெண்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உரிமைகள் பெருமைக்குரியதாக இருக்கின்றது. ஓராண்டுக்குள் எத்தகைய சீர்திருத்தம் பாருங்கள்!

●

ஆனால் இங்கு நாம் காண்பது என்ன? பார் புகழும் பண்டிதர் ஆளும் நாட்டின் கதி என்ன? மேல்நாடு மேல்நாடெல்லாம் சுற்றி அறிந்த நேருவின் இந்தியாவில் ...கள் எவ்வித உரிமையோடு இருக்கின்றனர் கேள்விக் குறியாகத்தான் இருக்கிறது இங்கு.

சதிராடும் சாதிச்சனியன் இன்னும் ஒழிக்கப்படவில்லை, வாட்டிப்பிழியும் வரதட்சணை முறை ஒழியவில்லை' விதவை விவாகம் அனுமதிக்கப்படவில்லை, பெண்களுக்கு சமுதாயத்திலும் தொழில் துறையிலும் சமபங்கு கொடுக்கப்படவில்லை குறிப்பாக காதலுக்கே இடம் கொடுக்கவில்லை சட்டம்! இந்த முறையிலே தான் இருக்கிறார் நாட்டை நேரு பெருமான் ஆண்டோ எட்டாகிவிட்டது!

சர்வதேச கவுரவத்தை எதிர்பார்க்கிறார். பாராட்டுகிறோம். வெளியார் போற்ற இருக்க வேண்டும் என்கிறார். ஒப்புக்கொள்கிறோம். ஆனால் உள்ளுக்குள்ளே எழும் புகைச்சல்களையும் அப்படியே மூடிவைத்துக் கொள்ள வேண்டும் என்பதல்ல பொருள். உன் வீட்டிற்குள்ளே இருக்கும் அசுத்தங்களை அப்புறப்படுத்திவிட்டுஅடுத்த வீடு சென்றால்தான் நன்மையானதாக இரு...

ரும்! இதை உணர மறுக்கிறார்—உணர்ந் தவர்.

இதோ 60 கோடி மக்களைக் கொண்ட சீனாதான் விடுதலை பெற்ற ஒரே ஆண்டிற்குள் செய்திருக்கும் சீர்திருத்தம் அம்மம்ம... சொல்லிமுடியாது!

ஆனால் நேருவின் இந்தியா விடுதலை பெற்று ஆண்டுகள் எட்டாகின்றன! எனினும் சீர்திருத்தம் சிறிதளவேனும் இல்லை!

மதத்தில் கைவைக்க வேண்டாம்—பயம் இருந்தால்! ஆனால் இந்தச் சமுதாயத்தில் நடமாடுகின்ற தற்குறித்தனங்களையும் தறுதலைப் போக்குகளையுமாவது விரட்ட முன்வரவேண்டாமா?

சமுதாய நலத்திற்காக குடும்பத் திட்டம், சேமநலத் திட்டம், சமுதாய அபிவிருத்தித் திட்டம் இப்படி எத்தனையோ திட்டங்களைப் போட்டிருப்பதாக பறைசாற்றுகின்றனரே தவிர திருமண சம்பந்தங்களில் நடைபெறுகிற அனாச்சாரங்கள் அழிந்ததாக சட்டம் இயற்றும் நிலை வரவில்லையே! இவ்வளவு சமூகநல ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டும் — பணம் செலவழிக்கப்பட்டும் என்ன வளர்ச்சி கண்டுவிட்டது நாடு?

இந்தச் சீர்திருத்தங்களைச் செய்யாது ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்பதில் என்ன அர்த்தம்? எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு என்பதில் என்ன பொருள் இருக்கிறது?

இந்த லட்சணத்தில் நாட்டை சீர்திருத்த புறப்பட்டிருக்கும் மடத்தம்பிரான்களின் தொகையோ ஏராளம். அவர்கள் இச் சீர்திருத்தம் பற்றி வாயாலாவது பேசியிருப்பார்களா? இராமகிருஷ்ண மடம் பிராஞ்சு பிராஞ்சாக எங்கும் வளர்க்கப்படுகிறதே அது செய்ததா இதுபோன்றவைகளை? கண்டித்துப்பேசவாவது செய்ததா? அன்னை சாரதாதேவியின் அருள்பரப்பும் அன்பர்கள் ஆதரித்துப் பேசியதாவதுண்டா? பரம அம்சர் பதிகம்பாடும் பெருமான்கள் இது விடயத்தில் சிரத்தை எடுத்துக் கொண்டதுண்டா? யார் பேசுகிறார்கள்—பேசினார்கள் எவர் எடுத்துக்காட்டினர். இதுபற்றி ஒருவரும் எடுத்துக் கூறவில்லையே! இந்த நிலையில் வளரும் மடங்களுக்கும், புகழ்பாடும் பத்திரிகைளுக்கும் அளவில்லையே! பேசுவது ஒன்று செய்வது மற்றென்று! என்ன மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. நாட்டில்?

நேரு கூட ஆதரிக்கிறார் இத்தகைய அக்கிரமங்களையும்—சேவகங்களையும். எனினும் என்ன பயனைக் கண்டார்! நல்ல சூழ்நிலை உருவாக்கப்பட்டதா? முதலில் நிறைவேறிய அற்ப சட்டத்திற்கு எழும்பின எதிர்ப்பிற்கு அளவில்லை! இதோ இப்போது அடிபடுகிற சொத்து வாரிசு மசோதாவிற்குக்கூட சொல்லடி யிருந்து கல்லடிவரை கிடைத்திருப்பதாக கூறப்படுகிறது!

பண்டிதர் பாருக்குப் பெரிய மனிதராக இருக்கலாம், ஆனால் நம்மைப்பொருத்தமட்டில் அவர் ஒரு பயங்கொள்ளி. வெளியே வீராப்புப் பேசுகிறார் உள்ளுக்குள்ளே வாய் மூடி மௌனி ஆகிவிடுகிறார்!

அதோ சீனம் சிரிக்கிறது நம்மைப் பார்த்து! ஒரு ஆண்டிற்குள் அது செய்திருக்கும் சிறப்பான அம்சங்களே நம்மைச் சிந்தை குளிரச் செய்கிறது. இன்னும் துரிதநடை போடுகிறது முன்னேற்றப் பாதையில்!

நேருவின் இந்தியாவிலோ—பெருமைதான் பேசிக்கொள்ள முடிகிறது—எட்டாண்டுகளாகி விட்டன என்று! முன்னேற்றமோ எள்ளளவும் இல்லை! சாதாரண திருமண சம்பந்தப்பட்ட விடயங்களைக்கூட கட்டுப்படுத்தி செம்மைப்படுத்த முடியவில்லை அவரால்! மதம்—மத ஆச்சாரம் போன்றவைகளில் கைவைக்க மனமே வர மறுக்கிறது!

ஆம்! கஞ்சிக்கு லாட்டரி கையில் பாட்டரி என்ற லட்சணம்தான் நினைவிற்கு வருகிறது—நேரு ஆட்சியை நினைக்கும்போது!

●

ஆரம்பக் கல்வி தொடர்ச்சி...

என்பதனால் மேற்கூறிய செய்தி அறியலாம்.

பௌத்தர்கள் புகட்டி வந்த கல்வியின் தரமும் வகையும் என்ன என்பதனை அறிவதற்கான வரலாற்றுச் சான்றுகள் ஒன்றும் தெரியவில்லை. ஆனால் பௌத்த ஆசிரியர்கள் பர்மாவிலும், இலங்கையிலும் கல்வி புகட்டிய முறைகளைப்பற்றி செய்திகள் கிடைத்திருக்கின்றன. அச்செய்திகள் கூறும் உண்மைகளை ஒட்டிப் பார்ப்பதால் நம் நாட்டிலும் பௌத்தக் கல்வி நடந்து வந்த விதமும் வகையும் ஒருவாறு தெரிந்து கொள்ள வழியுள்ளது 'பண்டைய இந்தியக் கல்வி' என்ற ஆங்கில நூலைச்சுள் அதன் ஆசிரியர் ரெவரெண்ட் எப். இ. கேய் அவர்கள் இலங்கை, பர்மா இருநாடுகளில் நடைபெற்று வந்த பௌத்த கல்வி முறையை எடுத்துக் கூறியுள்ளதின்றும் நம் நாட்டிலும் நடந்து வந்த பௌத்த கல்வி முறையைக் கூடிக் குறைத்துத் தெரிந்து கொள்ளலாம். இவர் இலங்கை நாட்டு பௌத்தக் கல்வி முறையைக் குறிப்பிட்டு கூறுவதாவது.

"புத்தர்கள் வாழ்ந்து வந்த இடங்கள் பன்னசாலைகள் என்று வழங்கி வந்தன. இவற்றில் தான் பொதுவாகக் கல்வி கற்பிக்கும் கல்விக்கூடங்கள் நடைபெற்று வந்தன. படிக்கும் சிறுவர்கள் யாவரும் ஒரே சமயத்தில் சென்று படிப்பது வழக்கமில்லை. அவரவர்களுக்கு ஓய்வு கிடைத்த போது கல்வி கற்கும் பள்ளிக் கூடங்கட்குச் சென்று வந்தனர். தங்கள் கல்வி நேரம் முடிந்தவுடனே தங்கள் வீட்டிற்கோ அல்லது தாங்கள் வேலை செய்யும் இடங்களுக்கோ சென்று விடுவார்கள் கல்விக்கூடம் என்பது சாதாரண ஒரு குடிசை தான். குடிசையின் நாலாபுற பக்கங்களும் அடைப்பு எதுவுமின்றி திறந்தே இருந்தன. குடிசையின் ஒரு மூலையில் சற்று உயர்ந்த திண்ணை போன்ற இடம் இருந்தது. அதில் மணல் பரப்பி இருப்பதன் மேல் சிறுவர்கள் எழுத்துக்களை எழுதிப்பழகினர். சப்தம் போட்டு உயர்ந்த குரலில் சிறுவர்கள் பாடம் ஓதி வந்தனர். உயர்ந்த குரலில் மட்டுமல்ல இராகம் போட்டு இசையுடனும் பாடம் ஓதி வந்தனர். அடிக்கடி எல்லா சிறுவர்களும் ஒன்றாகச் சேர்ந்து இப்பாடல்களை இசையுடன் ஓதி வருவர். முதன் முதல் அகரமுதல் எழுத்துக்கள் யாவும் கற்பிக்கப்பட்டன. எழுத்தை பார்த்துப் படிக்கும்போதே மணலில் எழுதிப் பழகவும் கற்றனர், பின்னர் எழுத்துக்களை ஓலைகளில் எழுதப் பழகினர். பின்னர் சிறுசொற்களும், கூட்டு சொற்களும் எழுதப் பழகினர். அவர்கள் கற்று வந்த நூல்களின் தொகை பலதாப்பட்டனவாகும், கிட்டத்தட்ட பதினைந்து நூல்கள் வரை பயிலப்பட்டு வந்தன எனத்தெரிகிறது.

ஊர், நாடு, கோவில், குகை முதலியவைகளின் பெயர்கள் தொகுக்கப்பட்ட தொகை நூல்.

புத்தரின் உருவம் தோற்றம் இவைகளை விளக்கிக் கூறும் நூல்
புத்தரின் புகழ் பாடும் இசைநூல்
பௌத்தப் பெரியார்களின் வரலாற்று [நூல்

புத்தரைப் போற்றும் சில செய்யுள் நூல்கள், இவைகள் ஈழம், பாளி சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் உள்ளவை.

நவரத்தின நூல். உலகில் உள்ள ஒன்பது சிறந்த பொருள்களைப்பற்றிக் கூறுவது. இதில் புத்தரை புகழ்ந்து பாடும் பாட்டுக்களும் உண்டு.

சமஸ்கிருத பழமொழிகள் கொண்ட நூல்.

புத்தரை தோத்தரிக்கும் சமஸ்கிருத பாட்டு நூல்.

கடைசி 24 புத்தர்களின் பெயர்களை கூறும் சமஸ்கிருத நூல்.

புத்தர் புகழ் பாடும் பாளிமொழி செய்யுள்கள்.

சூரியனைப் போற்றும் சமஸ்கிருத செய்யுள் நூல்.

அமரகோசம் எனும் சமஸ்கிருத அகராதி நூல்; பாளி மொழிபெயர்ப்புடன் கூடியது.

இப்படியாகப் போகிறது கல்வி கற்கும் நூல்களின் பட்டியல். இவைகளைத்தான் சிங்கள மாணவர்கள் கற்று வந்தனர் இவைகளை யெல்லாம் கற்றுத் தேர்ந்தவர் வெகுசிலரே." சிங்களத்தில் பௌத்தக் கல்வி நடைபெற்ற வாறு இப்படியாகக் கூறப்படுகிறது திரு. கேய் அவர்களால்.

பர்மாவில் நடைமுறையில் இருந்து வந்த கல்வி முறையைப்பற்றி கேய் அவர்கள் கூறுவதையும் காண்பது உதவியாக இருக்கும்.

"பர்மாவில் பௌத்த மடங்களில் நடைபெற்று வந்த பள்ளிகள் கிட்டத்தட்ட இலங்கைப் பள்ளிகளைப்போலவே நடந்துவந்தன. பௌத்த மடங்களில் நடத்தப்பட்டு வந்த பள்ளிகள் யாவருக்கும் திறந்திருந்தன. ஏழை பணக்காரன் என்ற வேறுபாடு காட்டப்படவில்லை. ஒரு பையன் 8 அல்லது 9 வயது அடைந்துவிட்டால் ஒரு பௌத்தப் பள்ளியை அடைவான். மடத்திலேயே சேர்ந்து பௌத்த ஊழியர்களாக ஆகிவிடுவோரும் உண்டு மரப்பலகையில் எழுத்துக்களை எழுத கற்றுக் கொடுப்பதிலிருந்து கல்வி கற்கும் முறை தொடங்குகிறது. உயர்ந்தக் குரலில் திருப்பித் திருப்பிச் சொல்லி அவ்வெழுத்துக்களை மாணவர்கள் எழுதி வருவார்கள் அவர்கள் படித்து வரும் நூல்கள் யாவும் பௌத்தமதம் சம்பந்தப்பட்டவையே. மதச் சடங்குகளுக்கான ஸ்தோத்திரப் பாக்களையும் பாளி மொழியையும் கற்று வந்தனர். புத்தரது வரலாறும் அவரது கருத்துக்களும் ஜாதகக் கதைகள் எனப்பட்ட பௌத்தக் கதைகளும் முக்கிய பாடங்களாக போதிக்கப்பட்டு வந்தன. ஆசிரியர்க்கு முன்னிலையில் மாணவர்கள் உட்கார்ந்திருப்பார்கள், ஆசிரியர் ஒரு பாடத்தை ஓதுவார், அதை மாணவர்கள் யாவரும் ஒரே குரலில் திருப்பி ஓதுவர், பௌத்தமடங்களில் தங்கி பௌத்த வாழ்க்கையில் ஈடுபட விரும்புவோர் மடங்களிலேயே தங்கி பௌத்த வாழ்க்கையில் ஈடுபடுவர், அதில் நாட்டமில்லாதவர்கள் 12 அல்லது அதற்கு முன் வயதிலேயே பௌத்தப்பள்ளியில் கல்வி பயில்வதினின்றும் நீங்கி விடுவர்."

இவ்வாறு இலங்கை பர்மா ஆகிய நாடுகளில் நடந்து வந்த புத்தக் கல்வி முறையை நம் நாட்டிற்கும் இணைத்துப் பார்த்தால் கிட்டத்தட்ட அதே முறைகளில் கல்வி நடந்து வந்ததை ஊகிக்கலாம், பாளி மொழியில் அக்கறைக் கொண்டிருந்தாலும் கூட தமிழ் நாட்டு பௌத்தர்கள் தமிழ் மொழியை வளர்ப்பதிலும் தமிழ் இலக்கியங்களை தோற்றுவிப்பதிலும் தமிழ்க் கல்வியை வளர்த்து வருவதிலும் பெரிதும் ஈடுபட்டிருந்தனர் என ஊகிப்பது உண்மைக்குப் புறம்பாகாது.

—தொடரும்

நெல்லையப்பர் கலா நிலைய பள்ளிக்கூட உதவிநிதி நாடகம்

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் நடிக்கும்

இன்பக்கனவு

நாடகம்

எம். ஜி. சக்கரபாணி, என். எஸ். நாராயணபிள்ளை, முத்துக்கூத்தன், ஜி. சகுந்தலா, காந்திமதி மற்றும் பலர்

●

16—4—55 சனிக் கிழமை இரவு 10-மணிக்கு
கரூர் டாக்கிடாக் தியேட்டரில்

17—4—55 ஞாயிற்றுக் கிழமை இரவு 10-மணிக்கு
மணப்பாறை கனி திறந்தவெளி அரங்கில்

19—4—55 செவ்வாய்க் கிழமை இரவு 10-மணிக்கு
பெரியகுளம் குமாரவேல் திறந்தவெளி அரங்கில்

கல்வியின் வளர்ச்சிக்கான இப்பணியிலே அனைவரும் ஒருமித்த மனதுடன் உதவி புரிந்து லட்சியம் நிறைவேற துணைபுரியக் கோருகிறோம்

—மீ சு. இளமுருகு பொற்செல்வி

நாடு என்றால் என்ன?

எம். எஸ். ராமசாமி.

11

கும்பமேளா

நாகரீக மக்களெல்லோரும் கை கொட்டி நகைக்கத்தக்க செயல் கும்பமேளா.

2—2—54-ம் தேதியில் கும்பமேளா நடந்தது, பல இலட்சம் மக்கள் கூட்டம்! அதில், சரிபாதிப்பேர் பெண்கள்! இத்தனைக்கும் அப்படி என்ன அதிசயம்? என்று கேட்கலாம்.

ஊராரை ஏய்த்து உழைக்காமல் தின்று கொழுத்த தடியன்கள்—நாக சாதுக்கள்! அந்த சாதுக்கள் நூற்றுக் கணக்கானவர் நிர்வாணமாக ஊர்வலம் வருவார்களாம்! அதைக் கண்டுகளிக்க இலட்சக் கணக்கில் ஆண்களும் பெண்களும் கூடியிருந்தார்களாம்! நாகசாதுக்கள் வந்தார்களாம்! அவர்களுடைய நிர்வாண நிலையை—நின்ற திருக்கோலத்தைக் கண்டுகளிக்க ஒருவரை ஒருவர் நெருக்கி இடித்துக் கொண்டு முந்தினார்களாம்! இதன் பயனாக சுமார் 400 பேர் செத்தார்களாம். அப்படிச் செத்தவர்களில் பெண்கள், குழந்தைகள்தான் அதிகமாம்! கையொடிந்தவர் காலொடிந்தவர் தொகை ஆயிரக் கணக்கில் இருக்குமாம்! இந்தக் கும்பலில் திரு. நேருவும், திரு. இராஜேந்திரப் பிரசாத்தும் இருந்தார்களாம்!

இப்படி ஒரு மானக்கேடான திருவிழாவும், அந்த மானக்கேட்டை கண்டு களிக்க இலட்சக் கணக்கில் கூட்டமும் தென்னிந்தியாவில் காணமுடியுமா? தென்னிந்திய மந்திரியாகவோ, தென்னிந்திய தலைவர்களாகவோ மதிக்கத் தக்கவர் எவராவது இத்தகைய திருவிழாவுக்குப் போவார்களா?

"நிர்வாணமாக 'மனிதக்கும்பல்' ஒன்று வருகிறது! அதைப் பார்க்க வருகிறீர்களா?" என்றால், தென்னிந்தியப் பெண்கள் யாராவது வருவார்களா? இத்தகைய திருவிழாவுக்கு பெண்களை அழைத்துக் கொண்டு போக திராவிடன் சம்மதிப்பானா?

200 பார்ப்பனர்களின் காலைக் கழுவித் தீர்த்தம் சாப்பிட தென்னாட்டான் சம்மதிப்பானா? அதிலும், படித்தவன் சம்மதிப்பானா? தற்போது, செத்துவரும் இந்து மதத்திற்குப் புத்துயிர் ஊட்டத்திரியும் திரு. ஆச்சாரியார் இந்தக் கால்கழுவும் வேலை செய்ய இணங்குவாரா? திரு. காமராசர் இணங்குவாரா?

இவ்வளவு பைத்தியக்கார நிலைமையில் திரு. இராசேந்திரர் இருந்தால், அவருடைய நாட்டு மக்கள்—வடவர்கள், அதிலும் பாமரர்கள், எப்படிப்பட்டவராக இருப்பார்கள் என்று சொல்லவும் வேண்டுமா?

இதே இராசேந்திரர் சில நாட்களுக்கு முன்னால் டில்லியில் நடைபெற்ற மலையாளிகள் மாநாட்டில் பேசி யிருக்கிறார் :—

"இமயமலை முதல் கன்னியாகுமரி முனைவரை பரவிக் கிடக்கும் கோடிக்கணக்கான மக்களின் உள்ளத்தில் ஊடுருவிநின்று ஒற்றுமையைக் கட்டிக் காத்து வருவது 'இராமாயணம் — மகா பாரதம்' ஆகிய இரண்டு இதிகாசங்களுமே ஆகும்." என்று.

இதிலிருந்து நாம், திரு. இராசேந்திரரை நன்கு புரிந்து கொள்ள முடிகிறது. எப்படி எனில், இப்போது கட்டி அமைத்திருக்கிற வடஇந்திய சாம்ராஜ்யம் 'மதம்' என்கிற கற்கோட்டையால் ஆனது என்றும் அந்தக் கற்கோட்டைக்கு அரணாக இருப்பவை பாரதம் இராமாயணம் என்றும், கருதி யிருக்கிறார் என்பதே!

அவர் அப்படித்தான் கருதிக் கொண்டிருக்கிறார் என்பதற்கு ஆதாரமாக அவருடைய 'இந்தியா பிரிக்கப்பட்டால்' என்கிற நூலில் உள்ள அடியிற் கண்டவைகளை எடுத்துக் கொள்ளலாம்:—

"சந்தியாவந்தனம் செய்கிற ஒவ்வொரு இந்துவும் 'சங்கல்பம்' பண்ணும்போது ஒரு சுலோகத்தைச் சொல்கிறான். அப்பொழுது பாரதத்தை ஒருநாடாகவே எடுத்துக்கொள்கிறான்" என்கிறார்.

சந்தியாவந்தனம் செய்கிறவர்கள் எல்லாருமே சுலோகங்களின்—மந்திரங்களின் பொருள் தெரிந்து சொல்கிறார்கள் என்று எவரும் கூறமுடியாது. பார்ப்பனக் குருமார்கள் கற்பித்த சுலோகங்களை நெட்டுருச் செய்து கொண்டு கதறுகிறவர்கள்தான் பெரும்பாலோர் இருப்பார்கள்.

இலட்சத்தில் ஒருவருக்குக் கூட சமஸ்கிருத—மந்திர சுலோகங்களின் பொருள் தெரியாது. பார்ப்பன சாதியில் பிறந்து புரோகிதத் தொழில் புரியும் பலருக்கே, அவர்கள் சொல்கிற சுலோகங்களுக்கு பொருள் தெரியாதென்பதை நாம் அறிவோம். அதைவிட முக்கியமாக திரு. இராசேந்திரருக்கு இந்தியாவின் நான்குதிசை நடப்பும் தெரியாது—மந்திரங்களின் பொருளும் தெரியாது என்பதை அவர் வாயிலாகவே அறிகிறோம்.

மலையாள வைதிகர்கள் சங்கல்பம் சொல்லும்போது மலையாளத்தை 'பரசுராம க்ஷேத்திரம்' என்று குறிக்கிறார்கள். தமிழ் நாட்டவர் சங்கல்பம் சொல்லும்போது பாரத வர்ஷம்—பரதக் கண்டம் என்னும் சொற்றொடர்கள் வருகின்றன. ஆனால் அவை அந்தந்தப் பிரதேசத்தின் எல்லைகளைக் குறிப்பதற்காகச் சொல்லப்படுகிறதேயன்றி 'பாரதம் ஒரே நாடு' என்ற பொருளில் அல்ல— அப்படிச் சொல்லவும் முடியாது. எங்காவது அப்படிச் சொல்லப்பட்டால், ஒன்று அது பிழையாக இருக்க வேண்டும், அல்லது தற்கால சிருஷ்டியாக இருக்க வேண்டும்!

ஏனெனில், புராண இதிகாசங்கள் எதிலுமே பிரிட்டிஷ் கால இந்தியாவை 'ஒரே நாடு' என்று குறிப்பிடா திருக்கும்போது சங்கல்ப சுலோகங்களில் மட்டும் எப்படிச் சொல்லி இருக்க முடியும்?

அது எப்படியோ போகட்டும், மதம் ஒன்றினாலேயே தமது சாம்ராஜ்யக் கோட்டை நிலைத்து நிற்கும் என்பதுதான் இராசேந்திரரின் கருத்து.

இதே கருத்தில்தான் சென்னைக் கவர்னர் என்னும் பேரால் தற்கால வாத்சாயனர்—கொக்கோகராகவும்இந்துமதபிரசாரகராகவும் பணியாற்றிவரும் திரு. ஸ்ரீ பிரகாசா அவர்களும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. இராசேந்திரர் டில்லி மலையாள மாநாட்டில் பாரத இராமாயணப் பாராட்டுப் பிரசங்கம் செய்து முடிந்த சில தினங்களுக்குப் பிறகு 13-12-54-ம் நாள் திரு. நேரு பேசி இருக்கிறார். அப்போதுதான் மதுரையில் இராதா இராமாயண நாடகக் கலவரம் நடந்த சமயம். அதுபற்றி அபிப்பிராயம் தெரிவித்தபோது திரு. நேரு கூறியதாவது :

"இராமயணத்தைக் கேலி செய்து நாடகம் நடத்துகிறார்கள். ஏன் அப்படி நடத்துகிறார்கள் என்ற காரணத்தைத்தான் நாம் அறிய வேண்டும். வடநாட்டு மக்கள், தென்னாட்டினரை இன்றுமட்டுமல்ல—ஆயிரமாரம் ஆண்டுகளாகவே அடிமைப் படுத்தி வருகிறார்கள்; இன்றும் சந்தர்ப்பம் கிடைத்தால் ஆதிக்கம் செலுத்துவார்கள் என்பதைக் கூட்டத்திற்குச் சொல்லவே இது மாதிரியான நாடகம் நடத்தப்படுகிறது. இத் தப்பெண்ணத்தை நாம் போக்கவேண்டும்"

மேலும், தொடர்ந்து பேசியிருக்கிறார் "ஏகலைவன் என்பவன் சூத்திரனாக இருந்த காரணத்தால், அவனுக்கு வில்வித்தை கற்றுத்தர துரோணாச்சாரியார் மறுத்தார். ஏகலைவனோ, துரோணாச்சாரியார் சிலை ஒன்றை வைத்து, வில்வித்தை கற்று அருச்சுனனையும் மிஞ்சினான். இதைக் கண்ட துரோணாச்சாரியார் அவனிடம் போய் வலது கைக் கட்டை விரலை குருதட்சிணையாகக் கேட்டார். அவனும் கொடுத்து விட்டான். இது என்ன அநியாயம் பாருங்கள்! இதைக் குறித்து நான் தீவிரமாகச் சிந்திக்க வில்லை. ஆனால் இந்த சம்பவத்தை எடுத்துக் காட்டிய நாடகத்தைப் பார்த்ததிலிருந்து என்மனம் வேதனைப் படுகிறது. சரித்திரம் அந்தக் காலத்தில் ஒரு தலைப்பட்சமாகக் எழுதப்பட்டிக்கிறது. அதை மாற்றி இந்தக் காலத்தில் அவரவருக்கு ஏதுவாக எழுதுகிறார்கள்"

திரு. நேரு கூறிய மேற்கண்ட பேச்சுக்களில் முன்னால் வந்திருப்பது இராமாயணம் பின்னால், வந்திருப்பது பாரதம். இரண்டு இதிகாசங்களுமே வடஇந்திய சாம்ராஜ்யத்தைக் குலைக்கக் கூடியன என்று அவர் கலங்குகிறார். திரு. இராசேந்திரரோ இதிகாசங்கள் அரண் செய்யும் என்று கருதுகிறார்! ஒருவருடைய பேச்சு அசட்டுத்தனமாக இருக்கிறது. இன்னொருவர் பேச்சு ஆராய்ச்சி கொண்டதாக இருக்கிறது. ஆனால் இருவருடைய பேச்சிலும் 'சாம்ராஜ்யப் பித்தம்' ஊடுருவி நிற்கிறது!

மேலே கண்ட ஆதாரங்களினால் வடக்கே மதம் எவ்வளவு பைத்தியக்காரத்தனத்தை உண்டாக்கி இருக்கிறதென்று நன்கு அறியலாம். அது வெறியாகவும் வளர்ந்திருக்கிற தென்பதற்கு திரு. காந்தியார் கொலை செய்யப்பட்ட சம்பவம் - அதற்காகக் கூறப்பட்ட காரணம் இவைகளே போதும். இத்தகைய மக்கள் எதைத்தான் செய்ய துணியமாட்டார்கள்.

இவ்வளவு வேறுபாடுகளுடன் மதத்தைக் கடைப்பிடித்திருக்கிற வடஇந்திய—தென்னிந்திய மக்கள், மதம் ஒன்றினாலேயே ஒத்துப்போவதும், ஒரே ஆட்சியின் கீழ் இருப்பதும் சாத்தியமா? மதம் ஒன்றாக இருந்தால் போதுமா? மற்றப் பண்புகள் வேண்டாமா? நாம் ஏற்கனவே குறிப்பிட்ட ஐரோப்பிய நாடுகளெல்லாம் மதத்தைப் பொறுத்த மட்டில் ஒரேமதம்—கிறுஸ்தவ மதந்தான். அப்படி யிருந்தும் அவைகள் தனித்தனி நாடுகளாக இருக்கக் காரணம் என்ன?

வடஇந்திய இந்து, காசுகளைக் கடலில் எறியும்போது, தென்னிந்திய இந்து வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கிறான்! 'அவன் ஒரு இந்துவாக இருந்தும் நம்மைப்போல் காசை எறியாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறானே' என்று வடஇந்தியர் நினைக்காமல் இருக்க முடியுமா?

"நாம், முஸ்லீம்களை அனுகவிடாமல் வைத்திருக்கும்போது, அவர்கள் உடனிருந்து உண்டு உறவு கொண்டாடுகிறார்களே" என்று வடஇந்தியர்கள் நினைக்கமாட்டார்களா?

இத்தகைய நினைப்புகள் வேற்றுமையை வளர்க்காமல் ஒற்றுமையையா பண்ணும்?

இதை இவ்வளவோடு நிறுத்திவிட்டு நாட்டு வரலாறுபற்றி ஆராய்வோம்.

—(தொடரும்)

'உண்மை ஊழியன்'

"உள்ளத் தூய்மையுடன் எவனொருவன் தன்னைப் பிறர்க்குத் தந்து பிறர் மகிழ்வொடு வாழ்வதிலேயே தன் இன்பம் இருக்கிறது என்று எண்ணுகிறானோ, எண்ணிச் செயலில் செய்கிறானோ அவனே ஆண்டவனின் உண்மை ஊழியன்".

"கோவிலுக்கு வெளியே கேட்கும் எத்தனையோ அழுகுரல்களுக்கு ஆதரவு காட்டாது கோவிலுட் சென்று ஆண்டவனை வழிபடுவதில் என்ன புண்ணியம் இருக்கிறது? ஆண்டவன் படைப்பில் ஒரு சாரார் உண்டு களித்திருக்க இன்னொரு சாரார் ஏன் துன்பத்தில் உழலவேண்டும்? வாழ்வு குலைந்து கிடக்கும் வறியவர்களின் துயரைப் போக்க வாழவந்தவர்கள் முன்வரவேண்டும். அவர்களின் நல்வாழ்க்கையிலே ஆண்டவனின் மனநிறைவு அடங்கியிருக்கிறது."

"ஆட்சித் தமிழ் கேட்டால் தனித் தமிழகம் கேட்டால் மொழிவெறி என்று கூறுகிறார்கள் அரசியலார். தாயை நேசிப்பது தாய்வெறியாகுமா? தந்தையை நேசிப்பது தந்தை வெறியாகுமா?"

மேற்கண்ட கருத்தினை மீண்டும் ஒருமுறை படித்துப் பாருங்கள். என்ன நினைக்கிறீர்கள்? தி. க. தி. மு. க. பேச்சாளர் யாரோ பேசியதன் ஒருபகுதி என்று எண்ணுகிறீர்களா? இல்லை குன்றக்குடி மடஅதிபதிகள்தான் இவ்வாறு பேசியிருக்கிறார். குன்றக்குடியார் கூறப்பட்டதாக வெளிவந்த மேற்கண்ட கருத்து அனைவருக்கும் உடன்பாடாயிருக்கும். உண்மை ஊழியன் பிறர் நலத்தை தன்னலமெனக் கருதுபவன்.

குன்றக்குடியார் யாரை ஆண்டவன் எனக் கூறுகிறார்? உழைப்பே ஆண்டவன், உண்மையே ஆண்டவன், அன்பே ஆண்டவன்; ஏற்றுக்கொள்ளலாம். பார்வதியின் பர்த்தா பரமசிவன், கோணல் நடத்தை கொண்டு கோபிகா ஸ்திரிகளின் ஆடைகளைப் பறித்து ஓடையில் விளையாண்ட கோபாலகிருஷ்ணன், அவர்களின் வழிவழி வந்தவர்கள் கந்தன் கடம்பன் கணபதி என கணக்கற்ற திருநாமத்துடன் திருத்தலங்களில் பொங்கலும் பொறியும் கேட்க வாயின்றி வகை வகுத்தூட்டும் அர்ச்சகர்களால் ஊட்டப்படும் கடவுள்கள் இவையெல்லாம் தன்னலத்தைத் துறந்தவர்களா? ஆண்டவனே தன்னலக் குன்றில் நிற்கும் போது அவர் வழிவந்தவர் மட்டும் எப்படி பிறர் நலம் பேணுவர். எனவே தான் அடிப்படையிலே மாற்றம் வேண்டும் என்கிறோம். ஆயிரக்கணக்கான ஆசைகொண்ட கடவுள்களை அறவே ஒழியுங்கள். ஒன்றே தேவன் என்ற ஒருமை வணக்கத்தை உண்டாக்குங்கள். அந்த ஆண்டவன் இருக்குமிடத்தை வங்கக்கவி ரவீந்திரர் கூறுகிறார். "He is there where the tiller is tilling the hard ground and the path maker is breaking stones". கல்லுடைக்கும் தொழிலாளி கடின உழைப்பாளி இவர்களிடம்தான் கடவுள் காணப்படுகிறார் என்பது.

காமம் பிடித்த கடவுள்கள், பிறன் மனைவியைப் பெண்டாளும் கடவுள்கள், பொறாமை கொண்டு போர் செய்த கடவுள்கள், பலி கேட்கும் கடவுள்கள் தான் பலப்பல இருக்கின்றனவே தவிர உண்மையான கடவுள் எதுவுமில்லை. அத்தகைய கடவுள்களுக்குத்தான் அடுத்தவனைக் கெடுப்பவன் அன்னாபிஷேகம், பஞ்சையைத் அடிக்க விட்டு பணக்காரனானவன் பாலாபிஷேகம், செய்கின்றனர். இன்றைய நாட்டிலே உண்மை ஊழியர்களை (அடிகளார் கருத்துப்படி) நிறைந்திருக்கின்றனர், இந்து கடவுளின் பெயரால் நடை பெறும் அநீதிகளையும் அக்ரமங்களையும் எடுத்துக்கூறி அவற்றை நீக்குங்கள் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கையுடன் வாழுங்கள் என்று கூறுபவர்கள் அவர்களால் நாத்திகர் என நாத்தழும்பேறக் கூறப்படுபவர்கள்தான் உண்மை ஊழியர்கள்.

தன்னலமழித்து பிறர் நலம் பேணும் ஆண்டவர்களுக்கு ஆயிரக் கணக்கான வேலி நிலங்கள் ஏன்? குந்த நிலமின்றி கொடுமைப்படும் ஏழைகளையல்லவா அவை சேர வேண்டும்! கந்தையின்றி கஞ்சியின்றி நெஞ்சலர்ந்து பலர் பரிதவிக்கும் போது காஞ்சிவரதருக்கும், தில்லை நடராசருக்கும், மதுரை மீனாட்சிக்கும், திருப்பதி வெங்கிடாசலபதிக்கும் ஏன் ஆயிரக்கணக்கில் ஆடைகள்! பிறர் நலம் பேண வேண்டுமென்றால் முதலில் அவையல்லவா ஏழை மக்கட்கு உதவப்பட வேண்டும்! குந்தக் குடிசையின்றி வீதிகளில் விதியை நினைத்து விம்முங்குரலுடன் வீற்றிருப்போர் எத்தனைபேர்? ஆனால் ஆண்டவனுக்கு மட்டும் ஏழு சுற்றுமதில்! ஏராளமாய்ப் படுக்கைஅறை/போஜனஅறை! இதுவா பிறர் நலம்! அவைகளை யெல்லாம் படிக்கப்பள்ளியில்லையென்று பரிதாபக் குரல் கொடுப்பவர்கட்கு, பல நோக்குப்பள்ளி அமைக்க போதிய வசதியில்லை என்பவர்கட்கு ஏன் அளிக்கக்கூடாது! இப்படி நடப்பவர் ஆத்திகர் உண்மை ஊழியர்கள் மேற் கண்டவாறு கேட்பவர் நாத்திகர்கள், அவர்கள் அகராதிப்படி. ஆனால் உண்மை ஊழியர்கள் மேற்கண்ட சொத்துக்கள் பிறர் நலத்துக்குப் பயன் படுத்த வேண்டும் என்று கூறுபவர்கள்தான்.

மேற்கண்டவாறு எண்ணுவது மட்டும் போதாது, செயலில் காட்ட வேண்டும் என அவரே கூறுகிறார். எனவே ஆண்டவனின் உண்மை ஊழியர்களே ஆத்திகப் பெருமக்களே ஒன்றாய்ச் சேருவோம்! தன்னலம் நீங்கப் பிறர்நலம் பேண நாம் பாடுபடுவோம் என்று கூற ஆரம்பித்தால் கொடுக்காமலிருந்தாலும் கெடுக்காமலிருக்க'மாட்டேன் என்கிறார்களே!

'கோவிலுக்கு வெளியே கேட்கும் அழுகுரல்களுக்கு ஆதரவு காட்டாது கோவிலுனுட் சென்று வழிபடுவதில் என்ன புண்ணியம் இருக்கிறது'—கேட்பது நாமல்ல. மதத்தின் காவலர்; ஆண்டவனின் ஆதரவாளர். இதையேதான் நீண்ட காலமாய் நாம் கேட்கிறோம்! அடுத்தவனைக் கெடுத்து வட்டிக்குவட்டி வாங்கி பெட்டியை நிரப்பி ஆண்டவன் பெயரால் ஒரு பகுதியைச் செலவிடும் பெருந்தனக்காரர்கட்கு எங்கிருந்து புண்ணியம் கிடைக்கிறது!

கழகத்தின் எதிரிகளே! மதத்தின் வாரிசுகளே! இப்போது புரிந்துகொள்ளுங்கள். ஆண்டவன் அந்தக் கோவிலிலில்லை. ஏழைகள் எங்கு உழைக்கின்றார்களோ அங்குதான் கடவுள் இருக்கிறார். ஆண்டவன் படைப்பில் ஒருசாரார் உண்டு களித்திருக்க இன்னொரு சாரார் ஏன் துன்பத்தில் உழலவேண்டும்! மக்கள் துன்பத்தால் உழன்றபின் ஆண்டவனைப் பார்த்து கேட்ட கேள்வியை இன்று அடிகளார் மக்களைப் பார்த்து கேட்கிறார். மக்களெல்லாம் அடிகளாரை நம்பியிருக்கும் போது அடிகளார் மக்களைக் கேட்கிறார் என்றால் ஆண்டவனின் பக்தி எந்த அளவில் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். வாழ்வு குலைந்து கிடக்கும் வறியவர்களின் துயரைப் போக்க கடவுள்கள் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. இதைக் கேட்பவர்கள் தான் நாத்தீர்களா! ஆண்டவனின் உண்மை ஊழியர்கள் பெருக அடிகளார் துணைசெய்தால் அதுவே நாட்டின் வறுமை நிலையைப் போக்கத் துணைசெய்யும்.

மதவெறியை மனதில் கொண்டு மகாத்மாவை சுட்டுக் கொன்றவனும் மதத்தின் பாதுகாவலன்தான் உயிரோடிருக்கும்வரை தாய்தந்தையரைவருத்தி இறந்தபின் ஈமச்சடங்கின் பெயரால் ஏராளமான தானம் செய்கிறானே அவனும் ஆண்டவனின் ஊழியன். குருட்டு நம்பிக்கை கொண்டு தனக்கு உண்ண வழியில்லையென்றாலும் ஆண்டவனுக்கு தானம் செய்கிறானே அவனும் உண்மை ஊழியன். இது அவர்கள் கருத்துப்படி.

நாட்டிலே சீர்திருத்தக் கருத்துக்கள் பரவப்பரவ அடிகளாரின் குரல் மாறுகிறது. அடிகளாரின் பாதையிலே நமது வாடை வீசுகிறது இந்த நிலை நீடிக்குமானால் கோணல் நடத்தையுள்ள கோபாலகிருஷ்ணன், முனிவர் மனைவிகளை மோகித்த பரந்தாமன் நமக்கு வேண்டியதில்லை. தன்னலத்தைத் துறந்த தொண்டர்கள், பிறர்நலம் பேணும் பெற்றியர்கள் எண்ணி எண்ணிதை செயலில் காட்டும் சீர்திருத்த வாதிகள் இவர்கள்தான்தேவை. உழைப்பவனே ஆண்டவனின் உண்மை ஊழியன். உழைக்காமல் உண்டு கொழுத்து உல்லாசபுரியில் வாழுகிறானே அவன் ஆண்டவனின் வைரி

இறுதியாக ஆட்சித் தமிழை'பற்றியும் குன்றக்குடியார் அறை கூவுகிறார்! மொழிப்போராட்டம் தேவையென்றால் இந்த குன்றக்குடியாரின் தொண்டர் படை திரண்டு வருமா! வடமொழி ஒலிக்கின்ற கோயில்களில் தமிழ் ஒலிக்குமா! இதைச் செய்ய வேண்டும் முதலில் குன்றக்குடியார், தமிழொலிக்கா மன்றங்கள் இருக்கக்கூடாது. இந்தி வெறி கொண்டு நம் மீது கட்டாயப் படுத்தி அவர்கள் திணிப்பதையும் எதிர்க்க வேண்டும். அதே சமயத்தில் நமது தாய் அரியணையில் ஏற வேண்டும் மொழுவழி நாடுகள் பிரியவேண்டும்! இனவழி ஒன்று சேரவேண்டும்! பொருளாதார விடுதலையும் வேண்டும். இவை பெருவதற் கெல்லாம் அடிப்படை உண்மை ஊழியர்கள் பெருகுவதுதான் வடநாட்டில் இந்தி அதிகாரக் குரல் ஒலிக்கிறதே! கேட்கிறதா! வாளாவிருக்காதீர்! உண்மை ஊழியர்களே விரைந்தெழுங்கள்பணிபுரிய/வளரட்டும் மொழிப்பற்று! வாழட்டும் உண்மை ஊழியர்கள்! வீழட்டும் போலிபக்தி!"

— கலையரசன்

அழகுமயிலே! ஆடுபொன்னூஞ்சல்!

—சித்தார்த்தன், பி. ஏ.,—

தாய் :

இன்பக் கனவெழிலே இதயத்துப் பூமழையே
துன்பக் கறை நீக்கும் தூமணியே வான்நிலவே!

சங்கத் தமிழ்க் கன்னியின் சாற்றைப் பிழிந்தெடுத்த
பொங்குசுவைப் பூரிப்பே பொன்னூஞ்சல் ஆடிடம்மா!

மகள் :

சோலை மலர்க்குலத்தில் சுந்தரங்கள் காணுதம்மா!
மாலைக் கதிரவன்தான் மாயம்பலக் காட்டுதம்மா!

தேனை வடித்தெடுத்த தெள்ளுதமிழ்ப் பாட்டொலியில்
ஊனைச் சிலிர்ப்பிக்கும் உன்னிசையைப் பாடிடம்மா!

தாய் :

ஆடிடுவாய் பொன்னூஞ்சல் அழகு தமிழ்ப் பெண்மயிலே
வாடிடுமென் நெஞ்சகத்தில் வந்துசுகம் மிஞ்சுமடி!

கோடிவிந்தை தோட்டமெனும் குவலயத்துச் சோலையிலே
பாடிமகிழ்ந் தாடிஅன்னைப் பைந்தமிழைப் போற்றிடடி!

கல்லறையில் தூங்குகின்ற கன்னித் தமிழ் முன்னோரின்
வில்லெழுந்த வெங்கணையாய் விசைபாய்ச்சி ஆடிடுவாய்!

மகிழமரக் காட்டினிலே மாங்குயிலின் கீதஒலி
நெகிழுமனம் கேட்குதடி நேரிழையே ஆடிடுவாய்!

முத்துவிளை நாட்டினிலே மூண்டெழுந்த தங்கநிலா!
சத்தான பொன்குறளைச் சாற்றிதினம் வாழ்ந்திடடி!

சந்தனத்துப் பொன்நிலமாம் சண்பகத்துக் கொல்லையிலே
சிந்தைநிறைச் செந்தேனும் சிலம்பொலியைக் கேட்டிடடி!

வாளொலிக்கும் போர்க்களத்தில் வஞ்சிபுறம் காணுதடி
தோள்பிணைக்கும் வீட்டகத்தில் தொன்மைஅகம்
[தோணுதடி!

புத்தமிழ்தச் சொல்லேட்டில் பொங்குதடி ஜீவசுகம்
சித்தம்மகிழ் நற்றிணையும் சேர்ந்துகளிப் பாக்குதடி!

காலமென்னும் தீச்சுடரின் கங்குபட்டு வேகாத
ஞாலமென்னும் பேரரங்கில் நற்றமிழும் வாழுதடி

வேல்முனைக்கு அஞ்சாத வீரத்தமிழ் நாட்டினர்நாம்
கோல்பிடித்துப் பாராண்ட கொற்றமதைப் பாடிடுவோம்!

இன்பத்திருப் பண்ணையிலே எழுந்தகதிர் நாற்றடி நீ
அன்புதவழ் அன்னைமனம் ஆர்த்தெழநீ ஆடிடுவாய்!

"திராவிடன்" சந்தா விவரம்

ஆண்டு சந்தா	...	ரூ. 8 0 0
ஆறுமாதம்	...	ரூ. 4 0 0
தனிப்பிரதி	...	ரூ. 0 8 0

திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளின் தேர்தல் முடிவுகள்

பொதுச் செயலாளரின் அறிக்கைப்படி 27-3-55-ம் நாள் நடைபெற்ற தி. மு. க. கிளைகளின் தேர்தல் முடிவுகள்.

(இதுவரை வந்துள்ள விவரங்கள்)

●

ராமநாதபுர மாவட்டம்

சாத்தூர்

செ : பி. பாலகிருட்டிணன்
து. செ : பி. காசிராசன்
பொ ; ஜி. ஏ. எஸ். இளங்கோ
மா. பி : ஆர். பி. சன்பாட்சன், எம். நடராசன்

காரைக்குடி

செ : து. பால்ராசு
து. செ : ஆ. பழம்நீ
பொ : அ. சுப்பு
மா. பி : மு. அ. கருப்பசாமி, பழ. சின்னச்சாமி

தஞ்சை மாவட்டம்

நாகப்பட்டினம்

செ : கே. கே. சித்திரவேலு
து. செ : எஸ். கல்யாணம்
பொ : கே. வி. ராமன்
மா. பி : எ. எஸ். பாண்டியன்

பேராவூரணி

செ : வி. கோவிந்தன்
து. செ : என். பக்கிரிசாமி
பொ : பி. பொன்னையன்
மா. பி : கு. அடைக்கலம்

முத்துப்பேட்டை

செ : வ. இராமநாதன்
து. செ : அரு. மு. கணபதி
பொ : கி. இராமானுசம்
மா. பி : ந. தருமலிங்கம்

கீரமங்கலம்

செ : சா. வைத்தியலிங்கம்
து. செ : எம். எஸ். கருப்பண்ணன்
பொ : கே. சின்னப்பா
மா. பி : எஸ். கே. சிவசாமி

பனங்குளம்

செ : ம. சொ. சிவகுருநாதன்
து. செ : மாணிக்கவாசகம்
பொ : எஸ். வி. சதானந்தம்
மா. பி : மு. இறைபருள்

அறந்தாங்கி

செ : ஈா. மாரிமுத்து
து. செ : ஒலியன்கர்ணு
பொ : கோ. வீரராகவன்
மா. பி : ஆர். அசோகன்

மரமடக்கி

செ : மெ. தியாகராசன்
து. செ : பி. எஸ். உத்தமநாதன்
பொ : பி. கே. துரைராசன்
மா. பி : பி. எம். கணேசன்

உறத்தநாடு (குப்பத்தேவன் வல்லை)

செ : எம். செல்லையா
து. செ : இரெ. கோவேர்தன்
பொ : ஏ. சண்முகம்
மா. பி : எஸ். ரெத்தினம்

வ. ஆ. மாவட்டம்

குடியேற்றம்

செ : இரா. சாரங்கபாணி
து. செ : த. சு. பாலகிருட்டிணன்
பொ : பொன்னரசன்
மா. பி : கு சி. பொன்னுசாமி பி ஜி. இராசன், எம். ஜி. வேலாயுதம்

பள்ளிக்கொண்டா

செ : பி. சி. விசுவநாதன்
து செ : வி. ஆர். வேணு
பொ : ஏ. பலராமன்
மா பி : பி. சி. விசுவநாதன்

திருவண்ணாமலை

செ : வ. குமாரசாமி
து. செ : அண்ணாமலை
பொ ; ப. உ. சண்முகம்
மா. பி : ப. உ. சண்முகம், துரை அண்ணாமலை

சேலம் மாவட்டம்

திருச்செங்கோடு

செ : டி. எ. நடேசன்
து. செ ; ம. ஆ. பொன்னுசாமி
பொ : செ. ஆ. செங்கோட்டையன்
மா. பி : டி. எஸ். தங்கவேலு

மேட்டூர் அணை

செ : அ. பாலு
து. செ : என். கந்தசாமி
பொ ; த. ரா. அழகிரிசாமி
மா. பி : க. கு. சின்னசாமி

திருச்சி மாவட்டம்

கல்லுக்குழி

செ; து. பாண்டியன்
து. செ; ஐ. எம். சரீப்
பொ: சோ. எழிலன்

அரியலூர்

செ; கதிரவன்
து. செ; மு. மெய்யப்பன்
பொ: செ. கிருட்டிணன்
மா. பி: இயலரசு

விடத்திலாம்பட்டி

செ; ரெ. பரசுராமன்
து. செ: கா. பா. முகம்மது
பொ: கு. துரைச்சாமி
மா. பி: வி. லச்சமன்.

மணப்பாறை

செ: காசிநாதன்
து. செ: என். வடிவேலு
பொ: என். கோதண்டராமன்
மா. பி: எ. எஸ். கணபதி

நெல்லை மாட்டம்

சங்கர நாயினர் கோவில்

செ: டி. ஆர். சுப்ரமண்யம்
து. செ: ந. சங்கரன்
பொ; க. பழனியப்பன்
மா. பி: டி. ஆர். சுப்ரமண்யம்

கோவை மாவட்டம்

பொள்ளாச்சி

செ: அ. சு. பாலு
து. செ: மா. பொன்மலை
பொ: ம. விசயன்
மா. பி: அ. பாலு, பி. என். இராமானுசம், பி. கே. முத்து

குளியமுத்தூர்

செ: தங்கமாணிக்கம்
து. செ: சி. அப்பாசாமி
பொ: அ. கிருஷ்ணன்
மா. பி: கே. ஏ. பி. முத்து

வெள்ளவாவிப்புதூர்

செ; ஈா. இராமசாமி
து. செ: கு. வீரப்பன்
பொ: பெரியசாமி
மா. பி. கு. முத்துசாமி

மீறுட்டிபுரம் (தாராபுரம்)

செ: ஏ. வி. சக்கரை
து. செ: வி. கிருஷ்ணசாமி
பொ: எஸ். சலாம்
மா. பி: ஏ. வி. சக்கரை

கொடுவாய்

செ: கே. பி. ராமசாமி
து. செ: பி சுவாமிநாதன்
பொ: எ. பழனிச்சாமி
மா. பி. எஸ். நமச்சிவாயம்

மாச்சாம்பாளையம்

செ : வி. கந்தசாமி
து. செ : கு. மருதப்பன்
பொ : ந. மயில்சாமி
ம. பி : வி. ராயப்பன்

காதக்கோட்டை

செ: க. முத்துசாமி
து செ; கே. பி. சுந்தரம்
பொ: எம். எம். கந்தசாமி
மா. பி: சின்னமுத்துசாமி

மதுரை மாவட்டம்

கம்பம்

செ: பி. பாலகிருஷ்ணன்
து. செ: பி சாகுல்அமீது
பொ: கே. டி. எஸ். மணி
மா. பி: எம். சிக்கந்தர்

ஒட்டன் சத்திரம்

செ: ஈா. ரெங்கசாமி
து. செ: மு சடையப்பா
பொ: ம. ரகீம்
மா. பி: ஈா. ரெங்கசாமி

தெ. ஆ. மாவட்டம்

சென்னப்பநாயக்கன்பாளையம்

செ : சிவப்பிரகாசம்
து. செ : கணேசன்
பொ : டி. தண்டபாணி
மா. பி : சே. மூசா

விருத்தாசலம்

செ : பா. குப்புசாமி
து. செ : வி. எஸ். மணி
பொ : கே. கே. மாரியப்பன்
மா. பி : சி. முனுசாமி

●

குன்னூர் ஆர்: எஸ்.

செ: அய்யுப்
து. செ; டி. பி. எஸ். மணி
பொ: வீ கா. ஒளியழகன்
மா. பி: வீ. கா. ஒளியழகன், சே. அ. ஆகன்

டாபீஸ்பேட்டை

செ: பழம் நீ. அரங்கண்ணல்
து. செ: அடியான்
பொ: அ. சு. அழகிரிசாமி
மா. பி: புத்தன். எஸ். அன்பழகன்

ஓவியர் அய்க்கனின் சுற்றுப்பயணம்

தனது தொழில் விஷயமாகவும், சித்திரக் கலையில் மேலும் சில நுணுக்கங்களை கண்டறியவும் ஓவியர் அய்க்கன் பம்பாய் முதலிய இடங்களுக்கு இம்மாதம் 16-ம் தேதி சென்னையை விட்டு செல்ல இருக்கிறார். மே மாதம் முதல் வாரத்தில் சென்னைக்கு திரும்புவார்.

பம்பாய் தி. மு. க. சொற்பயிற்சி வகுப்பு

●

திழமை தோறும் ஞாயிறு—வியாழன் ஆகிய நாட்களில் மாலை 6-30 மணிக்கு 'திராவிடரக'த்தில் நடைபெறும். பயிற்சி பெற விரும்பும் கழகத் தோழர்கள் மேற்குறிப்பிட்ட நாட்களில் தவறாது கலந்துக் கொள்ள வேண்டுகிறேன்.

அன்பன்
பி. எஸ். செல்லையா,
சொற்பயிற்சி வகுப்பு பொறுப்பாளர்

பட்டர் பிடிபட்டார்...தொடர்ச்சி

கூச்சல் போட்டு அதை மறைக்க முயன்றாலும், மூடப்பழக்க வழக்கங்களை வளர்த்து அதனை மூலதனமாகவும் கொண்டு உலுத்த வாழ்வில் புரண்டு திரியும் ஏமாற்றுக்காரர்களின் பித்தலாட்டத்திற்குப் பலியாகி தங்களின் தன்மானத்தையே பாழாக்கிக் கொள்ளும் திராவிட மக்கள் சற்று சிந்திக்க வேண்டாமா?

எனவே அப்பேர்ப்பட்ட சிந்தனைக்கு விருந்தாக இதோ மற்றுமோர் சம்பவத்தை எடுத்துக்காட்டாக வைக்க விரும்புகிறோம்.

"குடந்தை அடுத்த ஓம்பலச்சேரி கோவிலில் உள்ள அம்மன் கழுத்திலிருந்த தாலி 8—4—55-ல் களவாடப்பட்டுவிட்டது! அறுதாலியாக நமது அம்மன் இருந்து வருகிறது! மேற்படி கோவில் பட்டரான சீனிவாச அய்யங்கார் என்பவர்தான் அம்மன் தாலியை அபேஸ் செய்திருக்க வேண்டுமென்பது போலீசாரின் யூகம். காரணம், தாலி களவுபோனதிலிருந்து அய்யங்கார் அண்டர் கிரவுண்ட் (தலைமறைவாக) ஆகிவிட்டதேயாகும் என்று கூறப்படுகிறது. இறுதியாக போலீசாரால் பட்டர் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளியே வந்திருக்கிறாராம்!

ஆகும் நெறி எது—ஆகாநெறி எது அறிந்து சொல்வீரே நன்முயப் புரிந்து கொள்வீரே!

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதராஸ்-1
பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதராஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B :—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கன்னிக்கோட்டை. ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8, கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
" 102-1/127- பழனி ரோடு, திண்டுக்கல்
" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

பேராசிரியர் பேசுகிறார்!

வி. சுந்தரராசு, சங்கரன் பயிற்சிப் பள்ளி, திருச்சி.

5

தாய்மையுணர்ச்சியையும், தமிழர் நெறி வாழ்வையும் ஒத்துக் கொள்ளாத தமிழன் இம் மாநிலத்தில் இருக்கமாட்டான். நாடெங்கும் மொழிப்பற்று வளரும் இக்காலத்தில் இந்த இயற்கை அறத்தை யாருமே எதிர்க்காமல் தழைக்கும் காலம் வரும் என்று உறுதியாக நம்புகிறேன். இந்த ஆக்க உணர்ச்சியில் சமுதாய சீர்திருத்த வாதிகளும் சமய நெறிக்காரர்களும் கூட ஒன்றுபடுகிறார்கள். சீர்திருத்தவாதிகள் உலக நெறிக்கு இயைந்தவர்கள்; அறிவையே ஆலயம்; பகுத்தறிவே தேவன் என்று உணரக்கூடியவர்கள். வாழ்க்கை நெறியைப் பற்றி மிகுந்த அக்கரை உள்ளவர்கள். சமுதாய வளர்ச்சியில் அவர்களுக்குள்ள அக்கரை வேறு யாருக்குமே இல்லை என்றுகூட சொல்லலாம். மனிதனை மனிதனாக எண்ணும் மனப்பான்மை அவர்கள் இதயத்தில் வளரும், ஒன்றுபட்ட சமுதாயம் அமைக்க அவர்கள்தான் உறுதுணையாளர்கள். நாடெங்கும் விழிப்புணர்ச்சி மலரும் காலத்தில் அவர்களுக்கு மதிப்பு உண்டு. அவர்கள் உரையைக் கேட்கவும் அதன் வழி நிற்கவும் ஆயிரக் கணக்கில் கூடுவார்கள். ஆனால் நாடெங்கும் ஆபாச எண்ணம் பரவிவிட்டாலோ அவர்கள் கூடும் அரங்கிலெல்லாம் கல்வீச்சும் கலவரமும்தான் விளையும். நாட்டு மக்களும் வெறி பிடித்தவர்களாக இயங்குவார்கள்.

நானும் எத்தனையோ பகுத்தறிவாளர்களின் வாழ்க்கை வரலாறுகளை மிகவும் ஊன்றிப் படித்திருக்கிறேன். அவர்களெல்லாம் வாழ்க்கையில் நிம்மதியாக வாழ்ந்தவர்கள் என்று சொல்லமுடியாது. அப்ரகாம்லிங்கனும், அண்ணல் காந்தியும், ஏசுநாதரும் புத்தரும் வாழ்க்கையில் அடைந்த வேதனையால் தான் தங்கள் தங்கள் நெறிக்கு ஏற்ற புத்துலகத்தை உலகில் நிறுவ முடிந்தது. இவர்களெல்லாம் தாங்கள் வாழ்ந்த காலத்தில், பட்ட துயரத்தால்தான் வலிய இவர்கள் உண்மையை உணரும் காலமும் பிற்றை நாட்களில் மலர்ந்தது. இந்த சீர்திருத்தம் மலரும் நாட்களில் சமுதாயம் இவர்கள் உரைக்கு ஏற்ப அமைவது என்று என்பதுதான் கேள்வி.

சமய ஞானிகளைவிட சீர்திருத்தக்காரனுக்கே உலக அக்கரை அதிகம் உண்டு சுருக்கமாகச் சொன்னால், சமயஞானி உலகுக்கு அப்பாற்பட்ட உலகில் இயங்குபவன், ஆனால் சீர்திருத்தக்காரனோ உலக மக்களுக்காக இயங்குபவன்; கடவுள் நெறியைப் பற்றி பேசுவதுகூட சுலபமானது; ஆனால் உலக மக்கள் கடமைக் கூறுவதுதான் அரிதானது சமுதாயம் சொன்ன வழியில் நிற்காவிட்டால் இறைவன் பெயரால் அச்சத்தை வளர்த்து மக்களை அடிமையாக்கித் தான் விரும்பும் சமுதாயத்தை சமயவாதி அமைத்துக் கொள்ள இயல்கிறது. ஆனால் சீர்திருத்த வாதியோ காரணம் காட்டி விளக்கிய பிறகுதான், சமுதாயத்தை சீர்திருத்த இயலும். சமயவாதி எதையும் செய்து இறைவன் செயல் என்று கூறிவிடலாம்; ஆனால் சீர்திருத்தவாதியோ காரணம் காட்ட இயலாததைக் கூறிய, ஒழுக்கத்தில் தவறியும்விட்டால் உலகம் அவனை மட்டுமன்றி அவன் வளர்த்த இயக்கப் பாதையையே ஏசும். அறிவில்லாதவனும் ஆலயப் பணியில் புகுந்துவிட்டால் ஆத்மீக ஞான உருவத்தைப் பெற்று விடலாம். ஆலய ஆராதனை செய்யும் பூசாரிகள் அத்தனைப் பேருமே அறிவாளிகள் என்றோ, ஒழுக்கம் குன்றாத உத்தமர்கள் என்றோ பேசப்படக்கூடியவர்கள் அல்ல.

வாழ்க்கையில் எவ்வளவுதான் மடாதிபதியும் ஆலயப் பூசாரியும் தவறினாலும் அவர்களையே இறைவனின் பிரதிநிதியாக நம்பும் காலம் இன்னும் இருப்பதைக் காணுகிறோம். ஆண்டவன் பெயரால் வாழ்க்கையை இயக்குவோரும் இனங்கள் உயர்ந்த பீடத்தில் அமர்ந்து கொண்டு உலக சமுதாய வளர்ச்சிக்குக் கேடு செய்வதையும் காணுகிறோம். எவ்வளவுதான் இவர்கள் பொல்லாதவர்களாக இருந்தாலும் நல்லவர்களாகவே எண்ணும் மனப்போக்கு இன்னும் மக்கள் மனதில் படிந்திருப்பதையும் காணுகிறோம்.

நீருந்தும் சடாமுடியும் கொண்டு பக்திவடிவில் இயங்க முடிகிறது, ஆனால் சீர்திருத்தவாதியோ அப்படி இயங்க இயலாது. சீர்திருத்தவாதி பேசுவதை வாழ்க்கையிலும் கொண்டிருக்கிறானா என்று அறிய விரும்பும் உலகம் இது! கொள்கையை விட்டுக் கொடுத்து விட்டால் உலகமே ஒன்று திரண்டு ஏசும். எவ்வளவுதான் பொதுச் சேவை செய்தும் இந்நிலையாவது சுயதேவையிலும் ஈடுபட்டால் உலகம் அவனை வெறுக்கிறது. எனவே தான் சமய வாழ்வை விட சீர்திருத்த வாழ்வு தொல்லைதரக் கூடியதாக உள்ளது. இவ்வளவு தொல்லைகளையும் உணர்ந்து உயிர்த்தியாகம் செய்யத் துணிபவனே சீர்திருத்தவாதியாக முடிகிறது. எனவேதான் சீர்திருத்தம் கருதி வாழ்க்கையைப் புதுப்பிக்கும் எண்ணம் படைத்தவனை நம்பி! அவன் உரையில் உண்மை முழுதும் உண்டு! அவனே சிறந்த சிந்தனையாளன் என்று அடிக்கடி மாணவர் கூட்டத்தில் பேசுகிறேன்

உலக சமுதாயக் கண்ணோட்டத்தில் கூட சமயவாதிகளால் ஏற்படும் சீர்கேடுகளை அந்தந்த நாட்டில் தோன்றிய பகுத்தறிவாளர்களே தீர்க்க இயல்கிறது. சீர்திருத்தம் கோரும் நாடு வீழ்ந்துபட்டதில்லை; சமய நோக்கம் விரும்பும் நாடு உயர்ந்து பட்டதில்லை; சமய நெறியில் ஆழ்ந்து பட்டு உலகியல் நெறியை இழந்த நாடுகூட தமிழகம்தான். சமயத்துறையில் மூழ்கிப்போய் உலகியலை மறந்து பட்ட மக்கள் கூட்டமும் தமிழகத்தில் தான் மிளிருகிறது. உலகத்திற்காக சமயம் இயங்கவில்லையாம்! சமயம் தழைக்கவே உலகு இயங்கவேண்டுமாம்; இப்படிப்பட்ட எண்ணம் படைத்தக் கூட்டமும் தமிழகத்தில் ஏராளமாக மிளருகிறது. தாயக உணர்ச்சியைக் கூட இதன் காரணமாக, இழந்து படும் சமயவாதிகளையும் காணுகிறேன்.

சாதி முறையை வகுத்து சமயம் வளர்க்கும் கூட்டமும் தமிழகத்தில் மிளிர்கிறது. சாதியையும் சமயத்தையும் பேசிப்பேசி கருப்பொருளின் தன்மையை இழந்து உலகை மறந்த பித்தர் கூட்டமாகத் தமிழகம் திகழ்வதைக் காணுகிறேன். ஒழுங்குமுறை என்பது மக்கள் அனைவருக்கும் வகுக்கப்பட்ட பொது நெறி! ஒழுங்கு மீறியவன் யாராயினும் உலகில் பெருமை பெற அருகதை அற்றவன் என்பது பொது நெறி. சமயம் வளர்ந்ததுகூட இந்த பொது நெறியின் அடிப்படையிலே தான். ஆனால் தமிழகத்திலோ பொது நெறியிலும் சுய தேவையை பூர்த்தி செய்து கொள்ளும் கீழான பண்பு மிளிருகிறது. உயர் சாதிக்காரர் ஒரு கூட்டமாகவும் கீழ் சாதிக்காரர் சேரியிலும் வாழ வேண்டும் என்று வழிமுறை வகுக்கும் மரபினைத் தமிழர் மேலோராக எண்ணி ஏமாந்து விடுகின்றனர்.

நாடெங்கும் சாதி முறை வளர்வதைக் காணுகிறேன். குலத்திற்கோர் நீதி சொல்லும் மனப்பான்மை இன்னும் சிலரிடம் மிளிர்வதையும் காணுகிறேன். சமுதாயத்தில் வேறுபாடு கற்பித்து வாழும் இந்த இழிநிலை துடைக்கப்படும் நாள் என்று தோன்றுமோ? எவ்வளவுதான் அநீதிக்காரனாக இருந்தாலும் உயர்ந்த வகுப்புக்காரன் என்பதற்காக புகழுரை கூறி அடிபணிதலும், எவ்வளவுதான் நேர்மைக் குட்பட்டோனானாலும் கீழ்சாதிக்காரன் என்பதற்காக எட்டி விலகிப்போதும் கெட்ட பழக்கம் தமிழரினின்று இன்னும் நீங்கியபாடில்லை.

சமயவாதிகள் அனைவருமே உலகியல் நெறியினின்று விலகிச் சென்றவர்கள் என்று, எண்ணுபவனல்ல நான். எத்தனையோ சமயவாதிகள் உலகம் உண்டு என்பதை உணர்ந்து ஓதியுள்ளனர். மார்டின் லூதரும், புத்தரும் ஆரம்பித்த ஆத்மீக இயக்கங்கள் கூட பகுத்தறிவின் அடிப்படையில்தான், அவர்கள் வாழ்ந்த காலத்தில் ஒரு வகையான மறுமலர்ச்சி இயக்கங்களை இயக்கியவர்கள்தான்; ஆனால் அதே மறுமலர்ச்சி சமய உணர்ச்சிதான் பிற்காலத்தில் எத்தனையோ முன்னேற்றங்களுக்கு இடையூறு செய்தன சமயம் பிறப்பது கூட மனித எண்ணத்தால் தான்; அறிவின் அடிப்படையால்தான் அது இயங்க இயலும்; அறிவின் அடிப்படையில் இயங்கும் சமய உணர்ச்சி அறிவையே நம்புவதில்லை என்றால் அது சமய உணர்ச்சி என்று எண்ண இயலாது.

என் பழைய நண்பர் கந்தசாமி கூட பொறி இயற்துறையில் இந்த அளவுக்கு கொள்ளை லாபம் பெருக்கியது கூட இறையனருக்கு படைத்த தேங்காய் பழ ஆராதனையின் பயன் என்று தான் கருதுகிறார். தேநீர் விருந்தில் சந்தித்த அந்த நண்பர் தீய வழிகளில் பணம் பெருக்கியதை சொன்னபோது எல்லாம் அவன் கருணையால் தான் என்று ஆண்டவன் பேரில் பழியைப் போட்டு விட்டார் இந்த இழிநிலை அழியும் காலம் என்றோ!

தமிழகத்தில் நாத்திகம் வளர்கிறதே என்று எண்ணி பெரும்பாலோர் மனம் புண்படுவதைக் காணுகிறேன்; ஏன் நாத்திகம் வளர்கிறது என்பதை உணர்வதே இல்லை. நாத்திக வெறுப்பில் வளர்க்கும் ஆத்திகத்தைத்தான் தமிழகத்தில் காணுகிறேன். உண்மையான இறை நெறியை உணர்த்தும் ஆத்திகத்தை நான் நாத்திகம் என்று கருதப்படும் தலைவர்களிடமிருந்தே பெறுகிறேன்.

தளராத தாய்மைப் பண்பையும் ஒன்றுபட்ட சமுதாய எண்ணத்தையும் பரப்பும் இறைநெறிப் பண்பை நாத்திகர்கள் என்று கருதப்படுகிறவர்கள் தான் பெரிதும் பேணி வளர்க்கிறார்கள். ஒன்றித இயங்க வேண்டிய நம்பிக்கையையும் உலகம் உய்துய்ய தனித்தியங்கும் பெருமையும் இப்படிப்பட்ட சீர்திருத்தவாதிகளுக்குத்தான் உண்டு.

என் பழைய நண்பர் ஒருவரை சந்தித்தேன்; எவ்வளவுதான் சீர்திருத்தம் பேசினாலும் சமயவாதியின் காலில் வீழுந்து வணங்கும் காலம் வந்தே தீரும் என்று அவர் வாதாடினார். "அந்தப் பேராசிரியர் கடவுள் பக்தி மிகுந்தவர்; அடிக்கடி பக்தி பற்றி வற்புறுத்துவார். ஒரு நாள் கடவுளைக் காணும் வழிகளைப்பற்றி வாதாடியபோது கொஞ்சம் சிரித்துவிட்டேன். அவர் நிதானமாக "நீங்கள் ஏன் சிரிக்கமாட்டீர்கள். இப்பொழுது சிரிப்புமட்டுமல்ல, சினம்கூட வரும். ஆனால் நீ பல நாள் உன் குடுமியை நீட்டி நெளித்துச் சுருட்டிச் சீவி, பவுடர் ஸ்நோ போட்டு புதுச்சட்டை தைத்துப்போட்டு பலநாள் பாடுபட்டுக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்ட உன் காதல் ராணி கூந்தல் எல்லாம் கழிந்து மொட்டையாகி வியாதியால், மூலையில் முனகிக்கொண்டு படுத்திருக்க வேண்டும், மற்றோரிடத்தில் நீ பெற்றெடுத்த பன்னீர் செல்வன் டைபாய்டு வந்து கிடக்க வேண்டும். இதே சமயத்தில் உன் அம்மா செத்துத் தந்தி வர வேண்டும். உனக்கு உத்தியோகத்திலிருந்து லீவு கிடைக்கக் கூடாது. அப்போது நீ ஒன்றும் பேச வேண்டாம். உன்வாயே உன்னை யறியாமல் "அட கடவுளே! என்னைக் காப்பாற்று போதும் உன் சோதனைகள்" என்று வரும்" என்றவாறெல்லாம் சொன்னார். துயரம் ஏற்படும் போதுதான் இறைவன் தோன்றுவான் என்று அவர் கருதுகிறார். துயர மனதில் தோன்றும் இறைவன் உண்மையானவனா! நிலையானவனா! அப்படியானால் அவன் ஏன் துயரப்படும்போது மட்டும் தோன்றவேண்டும்!

உண்மைதான்! மனித உலகில் இதனையும் நான் காணுகிறேன்; எந்தவிதமான வேதனையும் இல்லாத போதில்தான் மனிதன் மனிதனாக இயங்க முடிகிறது. தீர்க்க முடியாத தொல்லையும் துயரமும் வாட்டும் போது மனிதன் எத்தனையோ உலகியல் வழிகளைக் கையாளப் பார்க்கிறான். எந்த வழியாலும் சோகக்கறையைப் போக்கிக் கொள்ள இயலா விட்டால் பித்தனாகவே மாறிவிடுகிறான். உலகியல் வழிகள் தீர்க்க முடியாத வேதனைகளை உலகுக்கு அப்பாற்பட்ட நெறிகளாவது தீர்க்குமா என்று ஆயாசப்படுகிறான். உலகம் கடந்து எங்கோ இறைவன் என்று ஒருவன் இருப்பதாகக் கூறுகிறார்களே அவனாவது தீர்ப்பானா என்று எண்ணிக் கலங்கிய மனம் 'கடவுளை வேண்டுகிறது. இதனால் அவன் கடவுளை உணர்ந்தவன் என்பது அல்ல உண்மை.

எந்த இயங்கு சக்தியாலும் இயக்க இயலாதவை கடவுள் பெயரால் இயக்குவிக்க அந்த பித்தனின் மனம் தூண்டுகிறது; இப்படித் தூண்டப்பட்ட மனதுகள் உலகில் ஏராளம்! ஆனால் இதனைத் தீர்த்துவைத்த கடவுளைக் கண்ட மனதுக்கள்தான் உலகில் இல்லை. புனைக் கதையும் கற்பனை கவிகளையும் உண்மையான வாழ்க்கை நிகழ்ச்சிகளாக நம்பி ஏமாந்துபோன தமிழ் மக்கள் இப்படியெல்லாம் கடவுளைப் பற்றி எண்ணி ஆயாசப்படுகிறார்கள். உண்மையான கடவுளின் பக்தன் கடவுளைப் பற்றியே எண்ணித் துடிபடமாட்டான். பிறந்த உலகில் ஒழுக்க நெறியோடு இயைந்து வாழ்பவன் நாத்திகனானாலும் சரி, ஆத்திகனானாலும் சரி உண்மையான இறைநெறிப் பாதையில் அவன் தான் செல்கிறான் என்று இயம்ப வேண்டும்.

சமுதாயமானாலும் அரசியலானாலும், தமிழ் நாட்டு மக்களுக்கு ஒன்று சொல்ல வேண்டுமானால் இதைத்தான் நான் சொல்லுவேன் பெரும் ஆனந்தத்தில் உள்ளபோது எண்ணும் எண்ணத்தையும் பெருந் துயரில் சிக்கித் தவிக்கும்போது எண்ணும் எண்ணத்தையும் வெளியிடாதீர்கள்; இன்னும் சொல்லப்போனால் அந்த எண்ணங்களை நம்பாதீர்கள் என்றுகூட சொல்லுவேன். மன அமைதியான நேரங்களில் பக்குவமான மனஉணர்ச்சி இயங்கும் போதுதான் மூளையும் நாடி நரம்புகளும் ஒன்றுபட்டு இயங்கும், மனிதனின் சுயஅறிவும் அப்போதுதான் மிளிர முடியும் நல்லதையும் அல்லதையும் அமைதிபட்ட மனமதான் பகுக்க முடியும் துடிக்கும் தோய்ந்த மனம் கற்பிக்கும் கடவுளும் ஆனந்த மனம் புதுப்பிக்கும் உலகப்பற்றும் சிறிது நேரமே மனதில் இருந்து மறையும் பண்புடையவை. அவற்றை நிலையானது என்றோ, உண்மையான அறநெறி என்றோ மக்கள் எண்ணக்கூடாது.

எனவே, தமிழ் நாட்டுக்கலையும் நாகரீகமும் இழிந்துபட்டு இருக்கும் இக்காலத்தில் நாடு முன்னேறவும் அழிந்துபட்ட தாய்மைப் பண்பை மீட்கவும், ஜாதி வேற்றுமை அழிந்துபடவும் நாட்டைக் காக்க நாட்டின் மீதும் உலகின் மீதும் நம்பிக்கை படைத்த சீர்திருத்தக்காரர்கள்தான் மிகவும் தேவைப்படுகிறார்கள். அவர்கள் வழியைப் பற்றினால் நாடு விழிப்புறும் என்று உணரும் காலம் தமிழகத்தில் என்று மிளிருமோ! —தொடரும்

முன்பு:—

குற்றாலத்தில் பாலத்து வாசியும்—சேகரும் சந்தித்து அரசியல் நிலைபற்றி உரையாடுகின்றனர். 'இடந்தேடிகள்' படம் பிடிக்கப் படுகின்றனர்.

●

28

அரசியல் அலைகளின் நெளிவைப்பற்றி கோரமே உருவெடுத்த ஒரு கெடுமதியாளன் சுவைபடக் கூறுகிறானே யென்று முதலிலே திகைத்துப் போனான் சேகர். புரியாததைச் சொல்லி தெளிய வைத்துவிட்டதைப் போல பாலத்துவாசி சிரித்துக் கொண்டிருந்தான். அந்தச் சிரிப்பிலே பயங்கரந்தான் தொங்கிக் கொண்டிருந்தது. அந்த அபாய சிரிப்பைமட்டும் அவனுக்கு துணை வைத்துவிட்டு சேகர் மாடிக்குப் போய்க்கொண்டிருந்தான். தலைக்குமேலே 'ஆசியாவின் ஜோதி' படமாகத் தொங்கிக் கொண்டிருந்தார். 'சோட்டா சோஷலிஸம்' பேசும் அந்த மாஜி விடுதலை வீரரின் நினைவு அவனைக் கவர்ந்தது. சொன்னதெல்லாம் மறந்த அந்தச் சொல்சியம் புதுபோஸ் கொடுத்திருந்தது அங்கே. காந்தி குல்லாயும் கதராடையும் அந்த மேனியிலே யில்லை. பாரீஸ் சீமானின் பளபளக்கும் ஆடைகள் இந்தப் பண்டிதரின் திருமேனியிலே. துரை மகனோ இவர் என்ற அதிர்ச்சி நமக்கு. அந்த மேரு புகழ் தாங்கியோ பூமாலைக்குள்ளே தலையைக் கொடுத்துக் கொண்டு பூரித்திருந்தார். சிவந்த ரோஜாவின் வனப்பதிகமா என் சின்ன உதடுகளுக்கு கவர்ச்சி அதிகமா யென்று கேட்பதுபோல நின்று கொண்டிருந்தாள்...... இல்லை இல்லை சாய்ந்து கொண்டிருந்தாள் அந்த 'லேடி மௌண்ட் பாட்டன்'

காய்ந்த கொடியிலே கருகிய மலர்! முடைநாற்றச் சேற்றிலே அழுகிப்போன செந்தாமரை! ஆசியாவின் ஜோதி ஆங்கில மாதரசிக்கு அருகிலே...! புகைப்படத்தின் காட்சி இப்படித்தானிருந்தது. ஏனோ அதை அந்த அறையிலே மாட்டியிருந்தார்கள் அழகுக் கண்ணாடி போட்டு. பாரத புத்திரனின் நிலையைத் தெளிவாக்கும் கண்ணாடியாகவுந்தான் அது ஆகியது. அந்த அறையை வாடகைக்கு விட்டு வாழ்பவனோ சுத்த சுயம்பாவி தேசபக்தன். தன்னலமற்ற அவனது தலைவர்கள் வெளியாரால் எப்படி யெல்லாம் நடத்தப்படுகிறார்கள் என்பதை குற்றாலத்தின் குளிர்ச்சி தேடி வருவோருக்கு கூடவே இந்த எண்ணத்தையும் பதியவைப்பதற்காகத்தான் படாதபாடுபட்டு படங்களைச் சேகரித்து மாட்டியிருந்தார். அவர் சிரமம் சேகருக்கு எங்கே புரியப் போகிறது. எனவே அலட்சியத்தோடு சிரித்துக் கொண்டே பார்வையை அடுத்த படத்தின் மீது நகர்த்தினான்.

கோகிலகான இசைவாணி தாமரைப் புன்னகை பூத்து அமர்ந்திருக்க பக்கத்திலே கோமானோ, சீமானோ வீற்றிருக்கவில்லை...... கோல் தாங்கி அமர்ந்திருந்தார். நாடும் ஏடும் துதிபாடிய அந்த நல்லவர்தான் வீற்றிருந்தார். மக்களின் அவதிபோக்க புதியமார்க்கம் காண வந்தவர் மஞ்சத்திலே அமர்ந்திருந்தார், இசை அரசியோடு. வடநாட்டுக் கல்நெஞ்சு... தென்னாட்டுக் குயில் மொழிக்காவது இளகுகிறதே அந்த அளவுக்கு மகிழ்ச்சியேதான். டில்லியிலே மோகன மாளிகையிலே 'சந்திப்பு' ஏற்பட்டு அந்த அதிசய சந்திப்பு 'கல்கி'யால் படம் போட்டு தேசியத் தீயிலே புடம் போட்டுக் காட்டி நாடெல்லாம் அறிந்து நல்லவரெல்லாம் சிரித்து அரும்பி மலர்ந்து வளர்ந்த அந்த 'இசைக் காதல்' வாழ்க வளர்க!

இசை அரசியின் பாக்யமே பாக்யம். சரஸ்வதி கடாட்சமென்பது பொய்யாகவா போய்விடும்! அகத்தில் மட்டுமா முகத்திலுந்தான் லட்சுமி நடமாடுகிறாள். அது இஷ்டமாக வருவதுதானே அதிர்ஷ்டமாம். இசைமாளிகைக்கு வருகைதந்த பெருமகனாரின் திருப்பாதம்பட 'கல்கி கம்பளி' என்ன தவம் செய்ததோ? தொண்டரடிப்பொடியார்கள் அவரின் கால் தாங்கும் கம்பளியாக ஏன் ஜெனித்திருக்கக் கூடாது? இறைவா கச்சிஏகம்பனே அடுத்த பிறவியிலாவது அந்த வரம் தாருமென்று கெஞ்சிக் கூத்தாடினராம்.

சர்வதேச பிரச்னைகளை ஒதுக்கி வைத்துவிட்டு சங்கீதவாணியின் வீடுதேடி வந்தாரே! இவரல்லவோ அபஸ்வரமில்லாத பண்டிதர். நாடாள வந்தவர் 'கோல்' பிடித்தால் போதுமா? கோகிலங்களின் இதயகீதத்தையும் புரிந்து கொள்ளும் ரசிக ரஞ்சகமிருக்க வேண்டாமா? திண்டுதூக்கி பிறர் மீது அடித்து விளையாடும் 'சிறுபிள்ளைத்தனம்' மட்டும் தெரிந்திருக்கக் கூடாது...இசையை இதயத்திலே பசைபோட்டு ஒட்டிக் கொள்ள வேண்டும். அந்தப் பாணி புரிந்திருக்க வேண்டும் மேரு புகழ் தாங்கி போல! இப்படிப்பட்டவர்களைப் பெற்றிருப்பதால்தான் 'பாரதம்' என்றும் மார்க்கண்டேயனைப் போல புதுப் பெண்ணாகவே யிருக்கிறது. யார் போட்டி போட்டுத் தலை தூக்க முடியும் நம்மோடு. பாரதத்துக்குப் புகழ் எது என்றால் 'ஆசியாவின் ஜோதி' ஒன்று போதுமே! அந்த ஜோதிதான் சுவரெல்லாம் ஒளி வீசியது. பார்த்து ரசித்துக் கொண்டே மாடிக்குப் போய்விட்டான் சேகர்.

கீழ் அறையிலிருந்த பாலத்து வாசிக்கு மின்வெட்டுபோல எண்ணங்கள் புரண்டன. ஓடோடி அவசர அவசரமாக சேகரின் மாட்டி யிருந்த சட்டைப் பையிலிருந்த துண்டுச் சீட்டை எடுத்தான். அந்தச் சீட்டிலிருந்த வனஜாவின் விலாசத்தை ஒரு முறைக்கு மூன்றுமுறை நன்றாகப் படித்துத் தெளிவாக்கிக் கொண்டு துண்டுச் சீட்டை சட்டைப் பையிலேயே வைத்துவிட்டு ஏதுமறியாததனைப்போல நாற்காலியில் போய் உட்கார்ந்து கொண்டான்.

ஆடை மாற்றிக்கொண்டு கீழிறங்கி வந்தான் சேகர். பணியாளும் வந்திருந்தான். இருவருக்கும் உணவு கொண்டுவரச்செய்து அருந்திவிட்டு பாலத்து வாசியையும் அழைத்துக் கொண்டு மேல் மாடிக்குச் சென்றான் சேகர்.

குற்றாலத்தின் குளிர்ச்சியின் முன்னே—கொடுவெய்யில் மண்டியிட்டிருந்தது. தென்னங்கிளைகள் ஆடி அசைந்து வீசிக் கொண்டிருந்தது. அந்தக் குளுமையிலே தன்னை மறந்து கண்ணை மூடியிருந்தான் பாலத்துவாசி.

'தூக்கம் வருகிறதா' என்று அன்பாகக் கேட்டான் சேகர்.

'தென்றல் தாலாட்டும் போது நீ அன்பாக உபசரிக்கும்போது வேதனை பறக்கிறது, தூக்கந்தான் தொடருகிறது'

'உன்னை உபசரிப்பது என் சுயநலத்துக்காகவுந்தான் தோழரே.

நான் பாராட்டுவேன் என்ற பெரு நினைப்பாலா?

அந்த அற்ப பாராட்டுக்காக அல்ல. என் இதயத்தைக் கொத்திக் கொண்டிருக்கும் கேள்வி அம்பை எடுத்து விடுவதற்காகத்தான் படாதபாடு படுகிறேன். அதற்காக உன் உதவியையும் நாடுகிறேன்.

'சிக்கல்பட்ட இதயத்தை நானா எடுத்து விடவேண்டுமென்கிறாய். உன் சிக்கல்தான் என்ன?

'நீதான்'

'நானா!'

'ஆமாம்! நீயேதான். எங்கிருந்தோவந்தஉன்னை ரயிலிலேசந்தித்தேன். உன்னை உள்ளன்போடு வரவேற்றான் யாரோ ஒரு நண்பன். நீயும்மகிழ்ந்திருந்தாய் ரயில் பயணத்தின்போது அவனைச் சந்திக்க நேர்ந்தது குறித்து. ஆனால் யார் உன் உயிர் நண்பனோ அவனின் அன்பு மனைவியை...அவள் அவனது ஆசை மலர் என்று தெரிந்திருந்தும் அவள் கன்னத்தில்......

"நண்பரே...நடந்ததைத்தான் பார்த்தீர். நான் அவளை முத்தமிட்டேன். அவள் பின்னர் என் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள்... இதுதான் நீங்கள் கண்ட காட்சியாக யிருந்திருக்கும், அந்தக் காட்சிக்கும் உள்ளே ஒரு பெரிய 'வரலாறு' அடங்கி யிருக்கிறது. நான் ரயில் காமுகனென்று நீ தவறாகத்தான் கருதி யிருப்பாய். அந்த இழிநிலைக்கு இன்னும் நான் வந்துவிடவில்லை சேகர். இன்று நான் ரயிலிலே முத்தமிட்ட அந்தப் பெண் இந்த நாளில் என் நண்பனின் மனைவியாக யிருந்தாலும், அந்தநாளிலே அவள் என்காதலி. காதல் துரோகம் செய்து விட்டாள் அந்தக் கள்ளி. மாளிகை வாசிக்கு மாலையிடப் போவதாக கூறி என்னை வெறுத்தொதுக்கி விட்டாள். காதல் இதயத்தைக் கசக்கி விட்டாள். அந்த நாடோடி இப்போது என் நண்பனிடம் அதுவும் அப்பாவி நண்பனிடம் சிக்கி யிருக்கிறாள். பழைய நினைவுகள் என்நெஞ்சை அரித்தன. எனவே தான் பயணத்தின்போது பழி தீர்க்கும் முறையிலே வஞ்சம் தீர்த்தேன்"

"அது உனக்கே இழிவைத் தந்துவிட்டதென்பதை நீ உணரவில்லையா?"

"என் நிலையில் சேகர் நீ இருந்தால் இப்படிக் கூறமாட்டாய்!'

எதை எதையோ சொல்லி சாமர்த்தியமாகத் தப்பிக் கொண்டதாக பாலத்துவாசி மனதுக்குள்ளேயே மகிழ்ந்திருந்தான். அவன் தந்த புதிய 'வரலாறு' சேதி கேட்டு இதயம் கனத்துப் போனான் சேகர். வனஜாவும்—நர்மதாவும் அவன் கண்முன்னே வந்து வந்து போனார்கள். 'காதல் கற்பனை' நெஞ்சை சுட்டுக்கொண்டிருந்தது. கொஞ்சும் வனஜாவும் கொத்தித் துரத்தும் நர்மதாவும் சிந்தனை அலைகளிலே நீந்திக் கொண்டே யிருந்தார்கள். அந்த நினைவோடு சேகர் உட்கார்ந்த நிலையிலேயே சாய்ந்து தூங்கிவிட்டான். பாலத்து வாசியோ விழித்துக் கொண்டே மனோகர மாலை நேரத்துக்காகத் தவமிருந்தான். நேரமோ அவன் உள்ளம்போல கடிவாளத்தை அறுத்துக் கொண்டு ஓடவில்லை.....எருமை வேகத்திலே நகர்ந்து கொண்டிருந்தது! —(இன்னும் வரும்)

(அடுத்த வாரம்—காதல்போர்!)

இராசிபாளையம் தி. மு. க. செயலாளர் மறுப்பு

16-3-55 தேதியில் வெளியான நவஇந்தியா காலைப் பதிப்பில் (இரண்டாம் பக்கம்) தோழர் எஸ். ராமசாமி என்பவர் தாம் இராசிபாளையம் தி. மு. க.வில் உறுப்பினராகவும், சாதாரண மெம்பராக இருந்ததாகவும், 10-3-55-ந் தேதியிலிருந்து இவ்வூர் தி. மு. கழகத்தைவிட்டு விலகி லேடியூர் இளைஞர் காங்கிரஸில் சேர்ந்து விட்டதாகவும் அறிவித்த செய்தி வெளியானது.

அவர் இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினருமல்ல, சந்தாதாரருமல்ல.

இதை நான் செயலாளன் என்ற முறையில் ஆதாரத்தோடு உறுதியாகக் கூறுகிறேன். எனவே இவ்விதமான செய்திகளைக் குறித்து உண்மையைக் கண்டறியாது இப்படி வெளியிடும் நவஇந்தியாவின் போக்கிற்கு வருந்துகிறேன்.

இங்ஙனம், இரா. பழ. அய்யாசாமி
செயலாளர் தி. மு. க., இராசிபாளையம்
கோவை மாவட்டம்

சுவைத்துப் பாரீர்!

குருகுலம்

குருகுலம் ஒன்றுமே எனக்கொரு மகிழ்ச்சி இருக்குதம்மா!

பிள்ளைகள்! என்ன "குருகுலம்" வடமொழிச் சொல் என்பதுதானா? அல்ல அல்ல! அதில் ஒரு போராட்டம் அடங்கியிருக்கிறதே! தமிழ் நாட்டு குருகுலப் போராட்டம்!

தமிழ் நாட்டு 'சரித்திரப் பிரசித்திப் பெற்ற' குருகுலம் என்ற சேரன்மாதேவியில் வ. வே. சு. ஐயர் நடத்தினார். அதை நடத்த இருபதினாயிரம் ரூபாய் தமிழ் நாடு காங்கிரஸ் உதவியளிப்பதாகத் தீர்மானித்தது. அப்போது பெரியார் ஈ. வெ. ரா. தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர். தீர்மானித்தபடி முதல் பங்காக ஐயாயிரம் ரூபாய் வழங்கி குருகுலம் நடந்தது.

குருகுலத்தில் அக்கிரகாரக் கொடுமைதான் பரந்தது. பார்ப்பனர் அல்லாதார் "பறையன்"கள் மதிக்கப்பட்டனர்.

அதிலே ஒரு நாயக்கமார் பிள்ளை—ஏழை இளம் பிள்ளை—படித்து வந்தது. அந்தப் பிள்ளை சாப்பாட்டு அறைக்கு சாப்பிடப் போச்சுது. "ஏலேய் சூத்திரப் பயலே! போடா!...போடா! ஏது! மடப் பள்ளியிலே உள்ளே சொண்டாறுவாய் போலிருக்கே! போய் தட்டை வச்சிட்டு வெளியிலேயே நில்! அங்கே உனக்கு சாப்பாடு வரும்! என்று விரட்டியது அக்ரகாரம்! இன்னும் இதைப் போன்ற கொடுமைகள் பல அடுக்கடுக்காய் வளர்ந்தன.

ஆனால் அந்தப் பிள்ளையின் உடம்பிலே சுயமரியாதை இரத்தம் ஓடிக்கொண்டிருக்கிறதென்பது தெரியவில்லை தெரியாதோ அந்த அக்ரகார மடிசஞ்சிகளுக்கு. அந்த பிள்ளை "பையன்" விட்டோடி ஓடித்து. அந்த பையன்தான் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்! ஆத்திரம் தெரிக்கிறது! இருந்தாலும் 'பெரிய பையன்' இருக்கும்போது......"அட்டே ஓடு 'பெரிய பையன்" கிட்டே போய் சொல்லு" என்றார்.

"அப்படியா தம்பி! சரியம்! ஆகட்டும்!"... பெரிய பையன் கொடி தூக்கினார்! தீர்மானத்தொகை இருபதினாயிரத்தில் முதல் பங்கு ஐயாயிரம் போக மீதி பதினைந்தாயிரத்தை குருகுல அட்டூழியம், சாதித்திமிர் ஒழிகிற வரையில் கொடுக்கக் கூடாதென தீர்மானித்தார் 'பெரிய பையன்' ஈ. வே. ரா.

ஆனால் 'முன்னுபட்டர்' வேலைய செய்து பெரியாருக்குத் தெரியாமல் பணத்தை செயலாளரிடம் 'செக்' எழுதி வாங்கிச் சென்றுவிட்டார் வ. வே. சு. ஐயர்.

பெரியாருக்கு ஆத்திரம் வந்து, குருகுலப் போராட்டம் என்கிற அளவுக்கு நடத்தி பார்ப்பனியத்தின் கொடுமையை முரசுக்கப் பாடுபட்டார்கள்.

இதை ஏன் இப்போது எழுதுகிறேனென்றால் குருகுலம் என்றால் என்ன? எப்படி இயங்கவேண்டும்? என்று நன்கு அனுபவரீதியாக அறிந்த திரு. ஓமந்தூர் ரெட்டியார் அவர்கள்—வடலூரில், ஏழைக் குழந்தைகளுக்கென குருகுலப்பள்ளி நடத்தப்போகிறாரென்றால் நமக்கெல்லாம் நம்பிக்கையோடு கூடிய மகிழ்ச்சியல்லவா?

அதற்கென அன்னாரின் 61 வது பிறந்தநாள் விழாவின்போது அறுபதினாயிரம் (60,000) ரூபாய் திரு. காமராசர் அவர்களால் அளிக்கப்பட்டது. பொதுமக்கள் அன்பளிப்பை பொதுப்பணிக்கே அர்ப்பணிக்கும் 'ஓ. பி. ஆர்.' வாழ்க!

சுந்தரனார்

உலகமுள்ளளவும், கவினத்தமிழ் நாடகம் 'மனோன்மணீயம்' நிலைத்து நிற்கும். மனோன்மணீயம் புகழ் ஓங்க ஓங்க பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை எம்.ஏ., அவர்களின் புகழும் ஓங்கா நிற்கும்,

இன்பத் தமிழ் மொழி, சுந்தரனார் 'உயிருக்கு வேர்!' திராவிட நாட்டில் வழங்கிவரும் கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு முதலிய நான்கு மொழிகளும் தமிழ்த் தாயின் சேய்கள் எனத் திட்டவட்டமாகக் கூறிப்போந்தார்.

இன்றைக்குச் சரியாக 100 ஆண்டுகளுக்குமுன். 1855-ம் ஆண்டு பங்குனித் திங்கள் 28-ம் நாள் தோன்றினார்.

நெடுங்காலம் பிள்ளைப் பேறில்லாதிருந்து கடைசியில் சேர நாட்டில், ஆலப்புழை என்னுமிடத்தில், பெருந் தனி வணிகர், பெருமாள் பிள்ளைக்கும் மாடத்தியம்மையாருக்கும் அருமைத் திருமகனாக அவதரித்தார் சுந்தரனார்.

தமது பன்னிரண்டாவது வயதிலேயே ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம், திருக்குறள், தேவாரம், திருவாசகம் முதலிய நூல்களை நன்கு கற்றுணர்ந்தார்.

தமது இருபத்தோராவதுவயதில் 'பி.ஏ.' கலைப் பட்டத்தை முதன்மையில் தேறிப் பெற்றார். பிறகு 1880-ல் திருவனந்தபுரம் மகாராசா கல்லூரியில் அறிவு நூற் புலவராய் இருந்த காலத்தில் அவர் 'எம்.ஏ' கலைப்பட்டத்தையும் பெற்றார்.

கல்லூரித் தலைவர் ராஸ் துரையின் உதவியால் பி.ஏ., பட்டம் பெற்ற ஆண்டே, கல்லூரி விரிவுரையாளர் பணியிலமர்ந்தார்.

பிறகு மறுஆண்டே 1877-ல் திருநெல்வேலி இந்துக் கல்லூரித் தலைவராக நியமனம் பெற்றார். அதே ஆண்டு சிவகாமியம்மையாரையும் திருமணஞ் செய்து கொண்டார் பிறகு, 1880-ல் திருவனந்தபுரம் மகாராசா கல்லூரியில் அறிவு நூற் புலவராக பணியாற்றினார்.

அவரது திறமையைக் கண்டு வியந்த விசாகத் திருநாள்—திருவாங்கூர் மகாராசா, சுந்தரனாரவர்களை அரண்மனை வேலையிலேயே அமர்த்திக் கொண்டார். அதற்குப் பின்னர் 1885 முதல் தனது இறுதிகாலம்வரை திருவனந்தபுரம் அரசர் கல்லூரிப் போசிரியராகவே பணியாற்றி 1897-ல் மறைந்தார்.

அவரது வாழ்க்கையின் செம்மைக்குக் கோடக நல்லூர்—சுந்தர சுவாமிகளின் பழக்கம் பெருந்துணை நின்றது. சுந்தர சுவாமிகளே அவரது குருவானார். அவர்மீது கொண்ட குருபக்திதான் 'மனோன்மணீய'த்தில் வரும் "சுந்தர முனிவர்" பாத்திரவாயிலாகப் பிரதிபலிக்கிறது.

சுந்தரனார் நினைவாக நாம்செய்ய வேண்டுவதெல்லாம், அவர் எதைக் காண விழைந்தாரோ அல்லது கண்டு வியந்தாரோ அத்திருவிடத்தை மீட்க உறுதி பூணுவோம்! உழைப்போம்! வியர்வை சிந்துவோம்! வேண்டுமானால் குருதியும் கொட்டுவோம்! ஓங்குக சுந்தரனாரின் புகழ்! வெல்க திருவிடம்!

சர்ச்சில்

தமது எண்பதாவது வயதில், வயது முதிர்ச்சிக்கு மாண்பளித்து, சர். வின்ஸ்டன் சர்ச்சில் பிரதமர் பதவியிலிருந்து 5-4-55-ல் விலகிக் கொண்டார்,

அவரது இடத்திற்கு ஐம்பத்தேழு வயது நிரம்பிய சர். அந்தோணி ஈடன் அவர்கள் பிரதமராக வந்துள்ளார்கள்,

சண்டை காலத்திலுஞ் சரி, சமாதான காலத்திலுஞ் சரி இங்கிலாந்து நாட்டு நற்பணியில், சர்ச்சிலுக்குப் பெரும் பங்கு உண்டு. புகழ் வாய்ந்த டோரிகட்சியின் 'அசாத்திய' மனிதராக திகழ்ந்து வருபவர், நீரையும் பாலையும் பிரித்தெடுக்க அன்னத்தால் முடியலாம்! ஆனால் சர்ச்சிலையும், சுருட்டையும் பிரிப்பது சர்ச்சிலாலேயே முடியாது!

அவர் ராணி எலிசபெத் அம்மையாரின் கரம் பற்றி முத்தமிட்டு என்னை பிரதமர் பதவியிலிருந்து விலக அனுமதி தாருங்களெனக் கேட்ட வைபவத்தையும் தங்களுக்குப் பிறகு யார்? என ராணி கேட்டிட, அதற்கு அவர் தமது வலக்கையாகவும் வாரிசாகவும் விளங்கி வந்த சர், அந்தோணி ஈடனை எனக் காட்டிய காட்சியையும் செய்திப் படமாக வந்தால்தான் கண்டு களிக்கலாம்!

அக்காட்சிகளை அறிவிக்க இலண்டனில் பனிரெண்டு நாட்களாக வேலைநிறுத்தத்தால் பத்திரிகைகளே இல்லாமலிருந்த போதிலும் பலராலும் பரவலாகவே பேசப்பட்டு வந்தன. ரேடியோ பேருதவியாய் இருந்தது,

சர்ச்சில் எவ்வளவுகாலம் பிரதமராக பணியாற்றினார்? கணக்காகச் சொல்ல வேண்டுமானால்: எட்டாண்டு ஏழுமாதம் இருபத்தைந்துநாட்களுமாகும். தொடர்ந்தாற்போல் ஐம்பதாண்டுகளுக்கு மேலாகவே அரசியலில் தீவிரமாக பங்கு கொண்டொழுகி வருகிறார்.

கட்டைதான் கிழடேயொழிய உள்ளமோ தள்ளுங்காலே!

அவரது நாவன்மையையும், அரசியற் குறும்புத் துடிப்புப் பேச்சையுங் கேட்போர் ஐம்பது வயது கூட நிரம்பா அண்ணு பேசுகிறார் என நினைக்கத் தோன்றும்! நம்மொழியில் அவர் ஒரு நல்ல 'பழைய மண்!'.

சமாதானப் பாதையிலே எப்படியும் ருஷ்யத் தலைவர்களுடன் கலந்து பேசியே ஆகவேண்டுமென்ற அவரது பேரவா பூர்த்தியாகாமலேயே பதவியிலிருந்து விலகிக் கொண்டார். ஆனால் அரசியலிலிருந்துத் தம்மை விடுவித்துக் கொள்ளவில்லை. அரசவையின் சாதாரண உறுப்பினராக இன்றுந் திகழ்கிறார்! எனவே ருஷ்யத் தலைவர்களுடன் கலந்து பேசி உலகில் சமாதானத்தை நிலைக்கச் செய்ய பின்னணியிலிருந்து மற்றவர்களைத் தூண்டி ஆவன செய்வார் என நம்பப்படுகிறது.

சர்ச்சிலை வென்றவர் அவரது சரித்திரத்திலேயேயாருமிலர்! காலந்தான் அவரை தோற்கடிக்க முடியும்! என்பது வயது! விலகினார்! அவ்வளவு தான். அதுவும் அவராக விலகிவிடவில்லை, விலகிவிட வயது வந்துவிட்டதாகவும் தான் ஒப்ப மறுத்தார். ஆனால் அருமை மனைவி, மருத்துவ நிபுணர்கள், கடைசியாக தம் கூட்டுத் தோழர்கள் விடாது கேட்டுக் கொண்டதற்கொப்ப இசைந்து விலகினார்

இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது அவருக்கு வயது 66. அப்போது அவராற்றிய பணி உலகமுள்ளளவும் நிலைத்து நிற்கும்.

போர் வீரனாக வாழ்ந்தார்—போர் உரை பகலும் நிருபராக வாழ்ந்தார். ஆற்றல் கொண்ட அரசியல் தந்திரியாக வாழ்ந்தார். பல நூல்களின் ஆசிரியராகத் திகழ்ந்து விளங்கினார். சொற்போர் மன்னனாகத் திகழ்ந்திட்டார். பழுத்த அனுபவத்தோடு கூடிய அறிவின் சிகரமாக வாழ்ந்து வருகிறார். அவரது அனுபவத்தோடு எழுதிய 'யுத்த விருத்தாந்தம்' (War Memoir) என்ற நூல் அவருக்கு நோபல் பரிசு பெற்றுத்தந்து பெருமையளித்தது, சித்திரம் தீட்டுவதிலும் நற்பழக்கமுடையவர்,

வளரட்டும் அவரது வாழ்க்கை! ஓங்கட்டும் அவரது புகழ்! என இரு விரலால் "V" காட்டி வெற்றி வாழ்த்து வழங்குவோம், வாழ்க.

—டபிள்யூ. பி. டி. எழிலன்

நடக்க இருப்பவை

★

விருத்தாசலம் வட்ட தி. மு. க. குழு

15-4-54 வெள்ளி மாலை 3-மணிக்கு விருத்தாசலம் வட்டக்குழு தேர்தல் திட்டக்குடியில் நடைபெறும் மாலை 6 மணிக்கு பொதுக்கூட்டம் திட்டக்குடி கடைவீதி அடுத்துள்ள திடலில் தோழர் பிச்சைமுத்து தலைமையில் நடைபெறும், தோழர்கள் என், வி, நடராசன், கோவை செழியன், க. அறிவழகன், கே. ஜி. சாமிநாதன் பேசுவர்.

பொன்மலை மேலக்கற்கண்டார் கோட்டை

தி/மு.க. 4—5-வது ஆண்டுவிழா 16-4-55 சனியன்று மாலை 6-மணிக்கு மேலக்கற்கண்டார் கோட்டை கழக மைதானத்தில் நடைபெறும் தோழர்கள் ஈ. வெ, கி, சம்பத், சிற்றுளி சுப்ரமண்யம், அம்பில் தர்மலிங்கம் பேசுவர்

தூத்துக்குடி தி. மு. கழகம்

17-4-55 ஞாயிறு மாலை 6 மணிக்கு சந்தன மாரியம்மன் கோயில் அருகிலுள்ள திடலில் பொதுக்கூட்டம் நடைபெறும் மதுரை கே. எஸ். சந்தானம் பேசுவர்,

சென்னை 18-வது வட்ட தி. மு. கழகம்

நான்காம் ஆண்டு விழா, 17-4-55 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு புளியந்தோப்பு பார்த்தசாரதி நாயுடு தெரு திடலில், புதியதாகத் தேர்ந்தெடுக்கப்படும் சென்னை மாவட்ட செயலாளர் தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். வி, நடராசன், ஏ. வி. பி, ஆசைத்தம்பி, கே, எம். கண்ணபிரான் பேசுவர்:

சென்னை 8-வது வட்ட தி. மு. கழகம்

18-4-55 திங்கள் மாலை 6-மணிக்கு பெத்து நாயக்கன் பேட்டை காசிவிசுவநாதர் கோயில் அடுத்த திடலில் தோழர் சி. ஆர், பாலசுந்தரம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும், தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி என். வி. நடராசன் பேசுவர்

மேட்டூர் தி. மு, கழகம்

18-4-55 மேட்டூர் பொதுசன சேவா சங்க மைதானத்தில் தோழர் க, கு. சின்னுசாமி தலைமையில் நடைபெறும் தோழர்கள் காஞ்சி கல்யாணசுந்தரம் எம், பி, சுப்ரமண்யம் எம், எல், ஏ, சிற்றுளி சுப்ரமண்யம் ப, கண்ணன் பேசுவர்,

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர், என். வி. நடராசன், சோழு அச்சகம் 16, கிலேயன்ஸ் ரைஸ் மில் தெரு. சென்னை 1.